ஆரம்பக்கல்வி

ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை மானேஜர்களு[illegible]

முன்னேற்றத்திற்கு உழைக்கும்

ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை

ஆசிரியர் : பி. வீரராகவன்

வருட சந்தா ரூ. 3 தனிப்பிரதி அணா 4

மலர் 11 | 1950, ஜூன் | இதழ் 6

பாடசாலைகளில் பிரிவினை ஏன் ?

முதல் வகுப்பு முதல் 8-வது வகுப்பு வரையில் உள்ள பாடசாலைகள்தான் ஆரம்பப் பாடசாலைகளாகும். இக்கருத்தை ஒட்டித்தான் அரசாங்கத்தாரும் 8-வது வகுப்பு வரையில் ஆரம்பப் பாடசாலைகளுக்கென பாடத்திட்டங்கள் தனியாக வகுத்திருக்கின்றனர். ஓர் மாணவன் 8-வது வகுப்பு படித்தவுடன் அரசாங்க பொதுப் பரீக்ஷையில் தேறி (E.S.L.C;) பிறகு உயர்தரபாடசாலையில் 4-வது பாரம் (IV Form) சேர்ந்து படிக்கிறான். பிறகு (S.S.L.C.) பரீட்சை வரையில் உயர்தரக் கல்வியை முடிக்கின்றான். இது சரியான முறை. ஆகவே நாட்டில் இருக்க வேண்டியது இரண்டுவித பாடசாலைகள்; ஒன்று ஆரம்பப் பாடசாலை, இரண்டாவது உயர்தர பாடசாலை. ஆனால்

இன்று நாட்டில் 5-வகுப்புகள் உள்ளது ஆரம்பப் பாடசாலை, 8 வகுப்புகள் உள்ளது உயர்தர ஆரம்பப் பாடசாலை, 3-வது பாரங்கள் (Forms) வரை உள்ளது செகண்டரி பாடசாலை, 6-வது பாரங்கள் (Forms) வரை உள்ளது உயர்தர பாடசாலை என நான்கு வித பாடசாலைகள் நடந்து வருகின்றன. ஆனால் நடைமுறையில் இந்த நான்கு வகை பாடசாலைகளும் ஒன்றுக் கொன்று தாழ்ந்தது, உயர்ந்தது, என்றும், பொது மக்கள் நினைப்பதும், அதற்கு தக்கவாறு ஆரம்பப் பாடசாலைகளிலிருந்து வரும் பிள்ளைகளை உயர்தர பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்கள் பரீட்சை வைத்து சில பிள்ளைகளை சேர்ப்பதும், சேர்க்காமல் விடுவதும் மிக மிக வருந்தத்தக்கதாகும்.

உயர்தர ஆரம்பப் பாடசாலையில் 8-வது வகுப்பு பிள்ளைகளுக்கு (E.S.L.C) பரீட்சை வைப்பதும், செகண்டரி பாடசாலைகளில் III-வது பாரத்திற்கு அரசாங்க பரீட்சை இல்லாது, பாடசாலை ஆசிரியர்களே பரீட்சை நடத்தி 4-வது பாரத்திற்கு மாற்றுவதுமான முறை மிக மிக நீதி அற்றதும் ஒழுங்கற்றதுமாகும். பிரித்தாளும் ஆங்கில ஆட்சியின் காலத்தில் ஏற்பட்ட இந்த முறை அடியோடு அழிக்கப்பட வேண்டும். எதற்காக இந்த முறை இருக்க வேண்டும் என்பதற்கு எத்தகைய தகுந்த காரணமும் காணப்படவில்லை. இத்தகைய முறையினால் ஆசிரியர்களுள் உயர்வும், தாழ்வும், ஏதோ உயர்தரப் பாடசாலையில் மாணவன் படிப்பானானால் அதிகமான படிப்பு பிள்ளைகளுக்கு போதிப்பதாயும், உயர்தர ஆரம்ப பாடசாலைகளில் படித்தால் படிப்பு மட்டமாக இருப்பதாகவும் பொதுமக்கள் தவறாக எண்ணுகின்றார்கள். அதற்குக் காரணம் பொது மக்கள் அறியாமை ஒருபுறமிருக்க, அத்தகைய பேதமை மனப்பான்மையை கல்வி அதிகாரிகளும், ஆட்சி யாளர்களும் இன்று வரை ஆராய்ச்சிசெய்யாமல், அவர்களும் அத்தகைய மனப்பான்மையயே வளர்த்து வருகிறார்கள். பல ஆண்டுகளுக்கு முன்பு 5-வது வகுப்புப் பிள்ளைகளுக்கு (Primary School) பரீட்சை என்றும், 3-வது பாரம் படித்த பிள்ளைகளுக்கு (MiddleSchool) பரீட்சை என்றும் அரசாங்கத்தார் வைத்து நடத்தினார்கள். அது நல்ல முறை. அத்தகைய பரீட்சைகளில் வித்தியாசமில்லாமல் எல்லாப் பாடசாலை மாணவர்களும் சேர்க்கப்பட்டனர். ஆனால் இன்றோ அரசாங்கத்தாரால் நடத்தப்படும் பரீட்சையில் செகண்டரி பள்ளிகளில் படிக்கும் பிள்ளைகளுக்கு பரீட்சை இல்லை என்றும், உயர்தர ஆரம்பப் பாடசாலைகளில் படிக்கும் பிள்ளைகளுக்கு பரீட்சை நடத்துவதும் போன்ற இந்த பிரிவினை

எதற்கு என்பது நமக்கு விளங்கவில்லை. (Secondary) பாடசாலைகளில் 3-வது பாரம் பிள்ளைகளையும் சேர்த்து (ESLC) என்பதை மாற்றி (Secondary School) பரீட்சை வைத்தால் நீதியும் ஒழுங்குமாகும். அப்பொழுது பொது மக்களுக்கும் ஆட்சி ஆளர்களுக்கும் செகண்டரி பாடசாலைகள் போதிக்கும் திறமையும், எலிமெண்டரி ஸ்கூல்களில் போதிக்கும் திறமையும் நன்ருக வெளிப்படும். உயர்வு தாழ்வு என்ற மனேபாவமும் ஒழியும்.

உயர்தர பாடசாலையில் போதிப்பதைக் காட்டிலும், ஆரம்பப் பாடசாலைகளில் போதிப்பது மிகமிக கடினம் என்பதை அறிஞர்கள், போதனு முறை தத்துவங்களை உணர்ந்தவர்கள் நன்கு அறிவார்கள். நமது நாட்டில் கல்வியின் வளர்ச்சி, அதன் திறம் தற்போதைய கல்வி முறை, நல்ல முறையில் இல்லை என்று பொது மக்களும், நாட்டின் நலன் கருதும் நல்லோர்களும், கருதுவதின் காரணம் கல்வியின் அடிப்படையாகிய ஆரம்பக் கல்வி பலவகையிலும் சீர் கெட்டு பாடசாலைகளில் 4 விதமாக பேதத்தன்மையுடன் பிரிக்கப்பட்டிருப்பதாகும். இதை ஆட்சி ஆளர்களும், கல்வி அதிகாரிகளும் உடனடியாக ஆராய வேண்டும். தற்போது நாட்டிற்கு வேண்டியது இரண்டு வித பாடசாலைகள்தான். ஒன்று 8-வது வகுப்பு வரை உள்ள ஆரம்பப் பாடசாலை, இரண்டு 4, 5, 6-வது பாரங்கள் வரை உள்ள உயர்தர பாடசாலைகளாகும். இந்த இரண்டு பிரிவினைக்கு மத்தியில் தற்போதுள்ள E.S.L.C. பரீட்சையைப் போன்ற ஓர் பரீட்சை நடத்தப்பட வேண்டும். செகண்டரி பாடசாலைகளெல்லாம் ஹையர் எலிமெண்டரி பாடசாலைகளாக மாற்றப்படவேண்டும். ஓர் மாணவன் ஆரம்பப் பாடசாலையை விட்டு உயர்தர பாடசாலையில் முதல் பாரம் சேரவேண்டுமானுல் 10 அல்லது 15 ரூபாய் அனுவசியமாக செலவழிக்க வேண்டி இருக்கிறது — ஏழைகள் நிறைந்த, கல்வி இல்லாத இந்த நாட்டிலே. எதற்காக தற்போது ஜில்லா போர்டுகளில் உள்ள ஹையர் எலிமெண்டரி பாடசாலைகளை எல்லாம் செகண்டரி பாடசாலைகளாக மாற்றி வருகின்றுர்கள்? எதற்காக இந்த மாற்றங்கள் என்பது புலப்படவில்லை. இதனுல் பொது மக்கள் பணமும் அதிகமாக பாழாக்கப்படுகிறது. ஓர் ஏழை மாணவன் 8-வது வகுப்பு வரை படிக்க வசதி இல்லாமல் 5-வது வகுப்பிலேயே பாடசாலையை விட்டு பாமரனுக விளங்கவேண்டியிருக்கிறது. 1-வது 2-வது 3-வது பாரங்களில் வைக்கப்படும் பாடப் புத்தகங்கள்தான் 6, 7, 8-வது வகுப்புகளில் பாடப்புத்தகங்களாக

வைக்கப்படுகிறது. பாடப்புத்தகங்களில் வித்தியாசம் கிடையாது, போதிக்கும் ஆசிரியர்களில் வித்தியாசம் கிடையாது; ஆனால் கட்டிடங்களில் மட்டும்தான் வித்தியாசங்களிருக்கின்றன. இதை ஆட்சி ஆளர்களும், கல்வி அதிகாரிகளும் பரிசீலனை செய்து செகண்டரி பாடசாலைகளை பழையபடி ஹையர் எலிமெண்டரி பாடசாலைகளாக மாற்றி எல்லாப் பாடசாலைகளிலும் 8-வது வகுப்பு மாணவர்களுக்கு அரசாங்க பொதுப் பரீட்சை வைத்து தேறினவர்களை மட்டும் உயர்தரப் பாடசாலைகளில் 4-வது பாரத்தில் சேர்க்கும் முறையில் கல்வியிலாகாவில் சட்டதிட்டங்கள் உடனடியாக மாற்றப்பட வேண்டும். தற்போதுள்ள 5-வது வகுப்பு பாடசாலைகளையெல்லாம் கூடுமானவரையில் 8-வது வகுப்பு பாடசாலைகளாக விரைவில் உயர்த்தப்படவேண்டும். அப்படிச் செய்தால்தான் நாட்டில் ஏழை பிள்ளைகள் 8-வது வகுப்பு வரையில் இலவசமாக படிக்கவும், 5-வது வகுப்பு வரையில் படித்துவிட்டு பிறகு படிக்க வசதியில்லாமல் பாமரர்களாக மாறாமல் இருக்கமுடியும். இதை கல்வி அதிகாரிகளும், ஆட்சியாளர்களும் விரைவில் கவனிப்பார்களாக.

சங்க வாசகங்களை வைத்துக்கொண்ட ஆசிரியர்களுக்கு வேண்டுகோள்

நமது புதுமுறை சங்க வாசகங்களை பாடபுத்தகமாக வைத்துக்கொண்டு, புத்தகங்களை ஆங்காங்குள்ள புத்தகக் கடைகளில், புத்தகங்களை வாங்கிய ரசீதை "ஆரம்பக்கல்வி" ஆபீசுக்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். அப்பொழுதுதான் அவர்களுடைய நம்பரை இங்கு ரிஜிஸ்ட்டர் செய்து கொண்டு மாதா மாதம் பத்திரிகையை அனுப்ப வசதியாயிருக்கும்.

நேரடியாக சென்னையிலிருந்து புத்தகங்களை வரவழைத்துக் கொண்ட ஆசிரியர்கள் ரசீதுகளை அனுப்பத் தேவையில்லை. அவர்கள் பெயரை இங்கு ஆர்டர் வந்தவுடன் பதிவு செய்து கொள்ளுகிறோம்.

புத்தகக் கடைக்காரர்களுக்கு நாங்கள் 20 சத விகிதம் கமிஷன் கொடுக்கிறோம். ஆனால் அவர்கள், அவர்கள் சிலவு, லாபம் போக ஆசிரியர்களுக்கு 10 சத விகிதத்திற்குமேல் கொடுக்கமாட்டார்கள். அவர்கள் 15 அல்லது 20 சத விகிதம் கொடுக்கும்படி சிலர் வற்புறுத்துவதாகதெரிகிறது. அது தவறு; அப்படி கமிஷன் 20 சத விகிதம் வேண்டுபவர்கள் சென்னை காரியாலயத்திற்கே ஆர்டர் அனுப்பி புத்தகங்களை பெற்றுக் கொள்ளவும்.

ஆசிரியர்

ஆரம்பக்கல்வி

பாட புத்தகங்களும் ஸ்தல ஸ்தாபன ஆசிரியர்களும்

பிள்ளைகளுக்கு பாடம் போதிப்பவர்கள் ஆசிரியர்கள். பிள்ளைகளுக்கேற்ற புத்தகங்களை தேர்ந்தெடுக்க உரிமையும் ஆற்றலும் உடையவர்கள் ஆசிரியர்களே. எய்டெட் எலிமெண்டரி பாடசாலைகளிலும், பஞ்சாயத்து போர்டு பாடசாலைகளிலும் அத்தகைய உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. ஆசிரியர்களுக்கு அத்தகைய உரிமை இருப்பதினால்தான் எய்டப்பாடசாலை ஆசிரியர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு திறமைக்கு ஏற்றவாறு நல்ல கருத்துக்களையும், நடையையும் கொண்ட பல பாடபுத்தகங்களை தேர்ந்து எடுத்து பிள்ளைகளுக்கு போதிக்கின்றார்கள். அதன் காரணமாக ஜில்லா போர்டு, முனிசிபாலிட்டி பாடசாலைகளில் படிக்கும் பிள்ளைகளின் படிப்புத் திறனும், பண்பாடும், எய்டெட் பாடசாலைகளில் படிக்கும் பிள்ளைகளிடத்தில் அதிகமாக காணப் படுகிறது.

பாடபுத்தகங்களை தேர்ந்தெடுக்கும் உரிமை ஜில்லா போர்டு, முனிசிபல் உயர்தர பாடசாலை (Hig School) ஆசிரியர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறதே ஒழிய, ஜில்லா போர்டு ஆரம்ப ஆசிரியர்களுக்கு அத்தகைய உரிமைக் கொடுக்கப்படவில்லை. இந்த உரிமையை முனிசிபாலிட்டிகளில் தலைவருக்கும், (Chair Man) ஜில்லா போர்டுகளில் கல்வி கமிட்டி அங்கத்தினர் (Standing Committe Members) களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆங்கிலேயர் ஆட்சியில் ஏற்படுத்தப் பட்ட இந்த வித்தியாச முறை சுதந்திர ஆட்சியில் முற்றும் மாற்றப்பட வேண்டும்—ஆரம்பக் கல்வி நாட்டில் திறமையாக ஆசிரியர்களால் போதிக்கப்பட வேண்டுமானால். இவ்வருடம் ஜில்லா போர்டுகளிலும், முனிசிபாலிட்டிகளிலும் புத்தகங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட முறையை சற்று ஆராய்ந்து பார்ப்போமானால், மிகமிக வேடிக்கையாகவும் வருந்தத்தக்கதாகவு மிருக்கும். சென்னை மாகாண கவர்னர் ஒருவர் தவிர மற்ற மந்திரிமார்களும், காங்கிரஸ் தலைவர்களும், கலெக்டர், எஞ்சினியர் ரெஜிஸ்டரார் போன்ற பல ஜில்லா அதிகாரிகளும் ஒவ்வொரு பாடபுத்தக கம்பனிகளின் சார்பாக சேர்மன், ஜில்லா போர்டு தலைவர்களுக்கும், மெம்பர்களுக்கும் நேர்முகமாகவும் மறைமுகவாகவும் சிபார்சுகள் செய்வதும், சிபார்சுகளின் காரணமாக ஜில்லா அதிகாரிகள் தயவு தாட்சண்யத்திற்கு எதிர்பார்க்கும் ஜில்லா போர்டு மெம்பர்கள் குறிப்பிட்ட புத்தகங்களை பாட புத்தகங்களாக வைக்கும்படி கல்வி கமிட்டிகளில் ஒருவருக்கொருவர் பல வாதங்கள் சண்டைகள் தோன்றி இதனால் கமிட்டிகளில் கட்சிப்பிரதி கட்சிகள் உண்டாகிப் பலமனஸ்தாபங்

களும் ஏற்பட்டிருக்கின்றன. அதுமட்டுமல்ல சில மெம்பர்கள் புத்தக கம்பனியாரிடம் பணம் வாங்கித்தான் புத்தகம் வைக்கின்றார்கள் என்ற அனுவசியமான சில கௌரவமான மெம்பர்கள் மீது புகார்கள் வரவும், ஏற்பட்டிருக்கின்றது. உண்மையாகவே கேட்கின்றோம். ஒரு பாடசாலைப் புத்தகங்களை வைப்பதற்கு உரிமை கொடுக்கப்பட வேண்டியது, படிக்கும் பிள்ளைகளின் மனதை அறிந்து பாடங்களைப் போதிக்கும் ஆசிரியர்களுக்கா? ஜில்லா போர்டு முனிசிபல் அங்கத்தினர்களுக்கா? ஜில்லா போர்டு, முனிசிப்பல் தலைவர்களும், அங்கத்தினர்களும், பாடசாலை இல்லாத கிராமங்களில் பாடசாலைகள் ஏற்படுத்தவும், அப்பாடசாலைகளுக்கு கிராமவாசிகள் தங்கள் பிள்ளைகளை அனுப்புவதற்கு பிரச்சாரம் செய்யவேண்டிய வேலையே தவிர, புத்தக கம்பனிக்காரர்கள் பணம் சம்பாதிக்க அவர்கள் பாட புத்தகங்களை வைப்பதர்க்கல்ல. இதனால் ஜில்லா போர்டுகளில் ஒருவருக்கொருவர் மனஸ்தாபமும் சண்டைச் சச்சரவுகளும் அவர் பணம் வாங்கினார், இவர் பணம் வாங்கினார் என்ற புகார்கள் சொல்லுவதர்க்கல்ல—பொது மக்கள் இவர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்புவது. ஆசிரியர் பிரியம்போல் பாட புத்தகங்கள் தேர்ந்தெடுக்கும் உரிமையை தாங்கள் கைப்பற்றி கொண்டு ஆசிரியர்களை நல்ல முறையில் பிள்ளைகளுக்கு போதிக்கப்படவில்லை என்றும், போர்டு பாடசாலைகள் திறமையாக வேலைச் செய்வதில்லை என்றும், குறை கூறுவதில் பிரயோஜனமில்லை. ஒரு தச்சவேலை செய்பவன் தன் வேலையை திறமையாக செய்யவேண்டுமானால் தனக்கு வேண்டிய ஆயுதங்களைத் தானே தேர்ந்தெடுக்க வேண்டுமேயல்லாது வேலைக்கு அமர்த்திக்கொள்ளும் எஜமான் சொற்படி செய்தால் வேலை சுகப்படாது. அதுபோல போதிப்பதற்கு வேண்டிய பாட புத்தகங்களை போதக ஆசிரியன் தேர்ந்தெடுத்தாலல்லாது பிள்ளைகளுக்கு படிப்பு நன்றாக ஏறாது, வளராது. ஆதலின், பாடபுத்தகங்கள் தேர்ந்தெடுக்கும் முறையை எய்டெட் பாடசாலைகளைப்போல் அந்தந்த பாடசாலை தலைமை ஆசிரியர்களையே தேர்ந்தெடுக்க விட்டுவிடவேண்டும். அல்லது தற்போது உயர்தர பாடசாலை ஆசிரியர்கள் கூட்டம் கூட்டி தேர்ந்தெடுப்பதுபோல, ஆரம்ப ஆசிரியர்களை தாலுக்காவாரியாக சங்கங்களின் மூலம் தேர்ந்தெடுத்து, அவர்களை பாடபுத்தகங்களைத் தேர்ந்தெடுக்கச் செய்யவேண்டும். கோவை முனிசிபல் சேர்மேன் செய்வதுபோல; தற்போது நடைமுறையில் உள்ள முறை நீடிக்குமானால் அனுவசியமாக ஜில்லா போர்டு தலைவர்களுக்கும் கல்வி கமிட்டி அங்கத்தினர்களுக்கும்

லஞ்சம் வாங்குகின்றார்கள் என்ற அனாவசியமான கெட்டப்பெயரும், ஜில்லா அதிகாரிகளுக்கு புத்தக கம்பனிக்காரர்களால் அனாவசியமான தொல்லைகளும் நாட்டின் கல்வியின் திறன் குறைந்து போகும் நிலையும், ஏற்படுமென்பதை எடுத்துக்காட்ட மிக வருந்துகிறோம். இந்த ஆபாசமான நிலையை தடுப்பதற்கு உடனடியாக அரசாங்கத்தார் உயர்தர பாடசாலை தலைமை ஆசிரியர்கள் பாட புத்தகங்களை வைத்துக்கொள்ள உரிமைக் கொடுத்திருப்பதுபோல, ஜில்லா போர்டுகளிலும் முனிசிபாலிட்டிகளிலும் சில ஆசிரியர்கள் சேர்ந்த ஓர் குழு ஏற்படுத்தி, அவர்களை பாட புத்தகங்கள் தேர்ந்தெடுக்கும்படியான சட்ட திட்டங்களை மாற்றி அமைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஆசிரியர்களுக்கு முதியோர் கல்வி பயிற்சி

சமீபத்தில் அரசாங்கத்தார் முதியோர்கல்வி பயிற்சி பள்ளி சென்னை ராஜதானி உயர்தர பளளியில் 22-6-50 முதல் 45 நாட்களுக்கு நடை பெறுமென்றும், அதில் தேறசிப் பெற்ற செகண்டரி கிரேட், ஹையர் கிரேட் ஆசிரியர்கள் சேர்த்துக் கொள்ளப் படுவார்களென்றும், அவர்களுக்கு மாதம் ரூ 22-8-0 ஸ்டைபண்டு அளிக்கப் படுமென்றும், எய்டட் பள்ளிகளில் வேலை செய்து வரும் ஆசிரியர்களுக்கும் மேற்படி பள்ளியில் சேர்த்துக் கொள்ளப் படுவார்களென்றும், பள்ளியில் பெற்று வரும் சம்பளமும், அலவன்ஸும் கொடுக்கப் படுமென்றும், ஆனால் பயிற்சிப் பெறப் போகும் ஆசிரியர்களுக்குப் பதிலாக வேறு ஆசிரியர்களை வைக்கக்கூடாது என்பதும் நிபந்தனை. உதாரணமாக ஒரு பள்ளியில 5 ஆசிரியர்கள் வேலை செய்கின்றனர்; அதில் 2 அல்லது 3 ஆசிரியர்களும் பயிற்சிப் பெற விருப்பமுள்ளவர்களாக இருப்பின், அவர்களனைவரையும் பயிற்சிப் பெற அனுப்பிவிட்டு, அவர்களுக்குப் பதிலாக வேறு ஆசிரியர்களையும் நியமிக்காமல் பள்ளியையும், பள்ளியின் மாணவர்களையும் வைத்துக் கொண்டு பள்ளியை எவ்வாறு நடத்த முடியும் என்று, முதியோர் கல்வியில் முற்றும் ஊக்கம் கொண்டு மேற்படி உத்திரவை பிரப்பித்த அதிகாரிகள் கொஞ்சமேனும் சிந்தித்தார்களா வென்பது தான் நமது கேள்வி. முதியோர் கல்வியை முற்றிலும் பரவ வேண்

டும், அது செவ்வனே பயனளிக்க வேண்டுமென்று கருதிய அரசாங்கத்தார், பள்ளியில் வேலை செய்யும் ஆசிரியர்கள் பயிற்சி பெற போகும் ஆசிரியர்களுக்கு பதிலாக வேறு ஆசிரியர்களை நியமித்து, பயிற்சிப் பெறும் 'ஆசிரியர்களுக்கும், மேற்படி கால அளவிற்காக அவர்களுக்கு பதிலாக நியமிக்கப் படும் ஆசிரியர் களுக்கும் கிராண்ட் அளிக்கப் பட்டாலொழிய பள்ளியில் வேலை செய்யும் ஆசிரியர்கள் மேற்படி பயிற்சி பெற முடியாது என்பது தான் எமது அபிப்பிராயம். ஆதலின், உண்மையாக அப்படிப்பட்ட ஆசிரியர்கள் பயிற்சிப் பெற வேண்டு மென்ற நோக்கம் அரசாங் கத்தாருக்கு இருக்குமாயின், பள்ளியில் தொடர்ந்து வேலை செய்யும் ஆசிரியர்களுக்கும், அவர்களுக்குப் பதிலாக நியமிக்கப் படும் ஆசிரியர்களுக்கும் கிராண்ட் அளிக்கப் பட்டு, முதியோர் கல்வியில் முற்றிலும் ஊக்கம் கொண்ட பெரியார்கள் தற்போது இருக்கும் உத்திரவை மாற்றி, மறு உத்திரவு திருத்தியமைத்து விடுவித்தா லொழிய, தற்போது ஆரம்பப் பள்ளிகளில் ஆசிரியர் பதவிலிருக்கும் ஆசிரியர்கள், மேற்படி பயிற்சிப் பெற இயலாது. அரசியலார் கவனிப்பார்களா!

அறிவுக் கதிர் !

"செடி கொடிகள் முளைத்த கோபுரங்கள், இடிந்த மதில்கள், முள்முளைத்த பிரகாரங்கள், குப்பைகள் நிறைந்த மண்டபங்கள், ஆடு மாடு மேய்ந்த தளவாடங்கள், பாசிபடர்ந்த தடாகம், பொரி கடலை சிந்திய படிகள், இருண்டு வெளவால் புழுக்கை நிறைந்த மண்டபங்கள், தடுக்கி விழக்கூடிய நடைபாதை, எண்ணெய் சிந்திய படி, அது தடவிய சுவர், மினுக்கு மினுக்கென்னும் தீபம், புகை நிறைந்த உள், புகை தூசி விழும் தளம், நாற்றம் வீசும் தீர்த்தத் தொட்டி, புழுக்கள் உறையும் ஆவுடையார், கரப்பான் உலாவும் திருமேனி, பெருச்சாளி பூனை வசிக்கும் கர்ப்பக்கிருகம், அழுக்கு அகலாமேனியும் பொடி முதலிய லாகிரி நுகரும் திருமூக்கும், வாயும், கொண்ட திருமேனி தீண்டுவார் முதலிய அநேக புனிதங்களையும் காணுமல் ஆலயம் செல்லும் ஓர் அன்பன் தன் வீட்டிற்குத் திரும்பினுல் அவன் பாக்கியமே பாக்கியம்"

கோவை சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார் பி. ஏ. பி. எல்.

29 MAY 1955
MADRAS

குழந்தையின் அறிமுகம்

(திரு. மு. அருணாசலம்)

சில வருஷங்களுக்கு முன் ஒரு நண்பர் வீட்டுக்குப்போயிருந்தேன். அவர் இளைஞர். அவர் மனைவியும் சிறு பெண். அப்பெண்ணுக்கு அப்போது தான் ஒரு குழந்தை பிறந்திருந்தது. தாய்மை யுணர்ச்சியிலேயே அத்தாயிடம் ஒரு பெருமை பொங்கி வந்தது. "குழந்தையைப் பார்த்தீர்களா?" என்று சொல்லிக்கொண்டே அப்பெண் குழந்தையை ஏந்திக் கொண்டு வந்து, என்னிடம் கொடுப்பதற்காகக் கையை நீட்டினாள்.

குழந்தை யென்றால், எப்படியோ எனக்கு ஒரு பயம். எங்கள் ஊரில் ஒருவர், ஆசை மிகுதியினால் சிறு குழந்தையைப் போய்த் தூக்கினார், தூக்கின முறை பிசகு காரணமாக குழந்தைக்கு அதிக உபத்திரவம் ஏற்பட்டு விட்டது. 'உரம் விழுந்திருக்கிறது' என்றார்கள். ஆனால் குழந்தைக்கு உடல் நல்ல நிலைக்கு வர அதிக நாளாயிற்று.

இது எனக்கு எப்போதும் ஞாபகம் இருப்பதுண்டு. நம்முடைய அபிமானம் காரணமாய்க் குழந்தை கஷ்டப்பட வேண்டாம் என்ற எண்ணத்தால் குழந்தையை நான் வாங்கிக் கொள்ள வில்லை. எப்போதும் இம்மாதிரியான அச்சம் இருந்து வருகிறது, இது கைக்குழந்தை அல்லது சிசுசம்பந்தமாக. ஆனால், ஐந்து வயதுக் குழந்தை யிடத்தில் யாரும் இப்படி அஞ்ச வேண்டியதில்லை. இருந்தாலும், பலர் கூச்சப்படுவதைப் பார்க்கலாம். நம்மோடு கூட ஐந்து வயதான நம் வீட்டுக் குழந்தையை அழைத்துக் கொண்டு அடுத்த தெருவிலிருக்கும் நண்பரைப் பார்க்கப் போகிறோம். நம்மைப் பார்த்து முகமலர்ச்சியோடு வரவேற்கிற நண்பர், குழந்தையைப் பார்த்தவுடனே ஒரு விதமான கூச்சமோ, அச்சமோ, தயக்கமோ அடைகிறார். முகம் மாறுபடுகிறது என்றால் உண்மை. அவருடைய பேச்சும், மலர்ச்சியும் அப்படியே நின்று போகின்றன. இது வாழ்க்கையில் நாம் அடிக்கடி அனுபவிக்கிற சங்கதி. ஏன் இப்படி நடக்க வேண்டும்? குழந்தையைப் பார்த்த மாத்திரத்தில் சகஜமாகவே நடந்து கொள்கிறவர்கள் அருமை.

மேற் குறிப்பிட்டவர்கள் கூச்சமடைவது ஒரு வகை. மற்றொரு வகை 'எந்தக் குழந்தையாயிருந்தாலும், நான் எல்

விசாகப்பழகிவிடுவேன்' என்று சொல்பவர்கள். சிலருக்கு இப்படிப் பழகும் திறமை இருக்கிறதென்பது உண்மை. எப்படியோ குழந்தைகளின் மனத்தையும் கவனத்தையும் கவர்ந்து, இவர்கள் ஒரு விதத்தில் குழந்தையோடு தோழமை பூண்டு விடுகிறார்கள். ஆனால் இப்படிப் பட்டவர்கள் அருமை.

சிலர் குழந்தையோடு பழகுவதென்றால், அவசியமில்லாமலே அதற்குச் செல்லம் கொடுத்துத் தட்டிக் கொடுப்பதே இதற்கு வழி என்று எண்ணுகிறார்கள். அன்போடு தான் இவர்கள் குழந்தையிடம் பழகுகிறார்கள்; தடவிக் கொடுக்கிறார்கள். தலையைப் பார்த்தாயா? என்ன அழகான சுருட்டை! புருவத்தைப் பார்த்தாயா?......உன் சட்டை யாரப்பா தைத்தது? மிகவும் நன்றாயிருக்கிறது!'' என்று எப்போதும் பாராட்டுகிறதோடு பக்கத்தில் இருப்பவர்களையும் பாராட்டும்படி அழைக்கிறார்கள். இப்படி அவசியமில்லாத அதிகப்படிப் புகழ்ச்சியும் நல்லதன்று. இது வரையில் எல்லோரோடும் சாதாரணமாய்ப் பழகிக் கொண்டிருந்த பையன் இப்போது தற்பெருமை அதிகம் கொள்கிறான். தன் நினைவு அதிகம் அவனிடம் உண்டாகிறது. தன் நினைவு குழந்தைகளின் வளர்ச்சிக்குக் கெடுதி தான் விளைவிக்கும். மேலும், "இந்த மாமா எவ்வளவு நல்லவர்! என்னைப் பார்த்துப் புகழ்கிறார். இதுவரையில் இப்படி யாரும் என்னைப் பாராட்டவில்லையே!'' என்று மற்றவர்களைப் பற்றி ஒரு சமயம் தாய் தந்தையரைப் பற்றிக் கூட அதிருப்தியடையவும் இப்பாராட்டுதல் காரணமாகிறது.

இனிப்புப் பண்டத்தில் சிறு பிள்ளைகளுக்கு ஆசை அதிகம். இதை யுணர்ந்து சிலர், சிறுவர்களிடம் பழகுவதற்கு எளிதான வழி, ஒரு பிடி பெப்பர் மிண்டுத் துண்டுகள் என்று இவற்றை எப்போதும் தயாராகக் கையில் வைத்திருப்பார்கள். குழந்தையைக் கண்டவுடனே அவன் கையிலோ, பையிலோ இவற்றைத் திணித்து, "போய்த்தின்னுபோ'' அம்மா ஒன்றும் சொல்லமாட்டாள்'' என்று தைரிய மூட்டி அனுப்புகிறார்கள். மிருகங்களைத் தீனி கொடுத்து வசப்படுத்துவது போலக் குழந்தைகளையும் வசப்படுத்திக் கொள்ளலாம் என்பது இவர்களுடைய எண்ணம். இது குழந்தைகளுக்கு நன்மையாகுமா? குழந்தையிடம் முதலில் அறிமுகம் செய்து கொள்வது இப்படித் தானா? வேறு வழியுண்டா?

குழந்தை என்றால் வெறும் பொம்மையல்ல; மிருகமுமல்ல; வீட்டில் அன்போடு வளர்க்கும் பூனைக்குட்டி நாய்க்குட்டி

போன்ற ஒரு பிராணி அல்ல. சிறுவன் ஒரு தனி மனிதன்; இந்தப்பாவத்தோடு தான் அவனிடம் பழக வேண்டும். தட்டிக் கொடுப்பதும் கொஞ்சுவதும், ஓரளவுக்குப் பொருத்தமாயிருக்கலாம். எல்லாக் குழந்தைகளும் இதை விரும்ப மாட்டா. அன்புக்குப் பஞ்சமாய் வாழ்ந்த குழந்தையும் கிரமமான உளவளர்ச்சி பெருத குழந்தையுமே இதை விரும்பும். மற்ற குழந்தைகள் இந்தக் கொஞ்சலை விரும்ப மாட்டா; வெறுக்குமென்றே சொல்ல வேண்டும்.

குழந்தையைக் கண்ட போதெல்லாம் 'கிச்சு கிச்சுப் பண்ணுவது வேறு சிலர் வழக்கம். அழுகிற அளவுக்குக் கூடச் சிலர் கிச்சு கிச்சு பண்ணுகிருர்கள். அவனுக்குச் சந்தோஷம் தருவதற்கு அல்லது அவன் சிரிக்கும் படி செய்வதற்கு இதுதான் வழி என்பது இவர்கள் எண்ணம். இந்தப் பழக்கமும் கேடானது. ஏனென்ருல் குழந்தையும் மற்றவர்களிடம் இவ்வேலையைக் காட்ட ஆரம்பிக்கிருன். இவர்கள் விளையாட்டாக ஏதோ ஆரம்பித்தது, அவனுக்கு உண்மையான விளையாட்டாகவே ஆகிறது. பெரியவர்களை விலாவில் வந்து அவன் கிண்டுகிருன். சில சமயம் நாம் பொறுத்திருக்க முடியும்; எப்போதும் பொறுத்திருக்க முடியாது. எந்த அளவுக்கு விளையாடலாம், எப்போது நிறுத்த வேண்டும் என்று அவன் அறிவதில்லை. பெரியவர்களோடு நாம் முக்கியமான பேச்சுப் பேசிக் கொண்டிருக்கும் போதுங்கூட, அவன் வந்து இம்மாதிரி விளையாடுகிருன். நமக்குப் பொறுக்க முடியாத தொந்தரவாயிருக்கிறது. நம் தொந்தரவை யுணர்ந்து தகப்பனுர் குழந்தை முதுகில் ஓர் அறை வைக்கிருர். குழந்தையைச் சந்தோஷப் படுத்த வேண்டு மென்று நாம் வேடிக்கையாகத் தொடங்கிய விளையாட்டு, அவனுக்கு இப்படித் தண்டனையாக முடிகிறது.

குழந்தையிடம் பேசும், போது கொஞ்சல் பேச்சையோ மழலைப்பேச்சையோ நாம் பேசக்கூடாது; நம்முடைய பேச்சிலும் உச்சரிப்பிலும் எத்தனையோ தவறுகள் கோளாறுகள் இருக்கக் கூடும். மற்றவர்கள் இதே தவறுகளையும் கோளாறுகளையும் அமைத்து நம்மிடம் பேசுகிருர்கள் என்று வைத்துக் கொள்வோம். நம்மைப் பழிப்பதாகவே நாம் எண்ணுவோம்; கோபம் வரும். குழந்தையும் இப்படித்தான். அவனை உற்சாகப் படுத்துவதாக எண்ணிக் கொண்டு, மழலைச் சொற்களை அவனிடம் நாம் பேசுவது சிறிதும் தகாது. அவனுடைய பேச்சு, திருந்தாத பேச்சு. பெரியவர்களைப் பார்த்து அவர்கள் போல்தான் ஆகவும் பேசவும் அவன்

ஆசைப்படுகிறான். இந்த ஆசை நியாயமானது. இந்த ஆசையைப்பூர்த்தி செய்வது பெரியவர்கள் கடமை. அவனைப் போலவே பெரியவர்களும் மழலைப் பேச்சுப் பேசுவது அவனுடைய பேச்சுத் திருந்து வதற்கு உதவாது; ஆகவே, இதில் அவனுக்கு விருப்பமு மிராது. நம்முடைய மழலைப் பேச்சு அவனுடைய பேச்சைப் பழிப்பதாகு மென்று எண்ணினாலும் தவறில்லை.

"மூடத்தனமாக" அவனிடம் விளையாட்டுக்காக வும் பேசுவது செய்வது நடிப் பது முதலான யாவும் தவறு. குழந்தையுடன் நாம் பழகும் போது செய்யும் காரியங்கள் அநேகம் இயல்பாகவே தப்பா யிருக்கின்றன. இப்படி இருக்க வேண்டுமென்று தப்பும் மூடத் தனமும் செய்வது அவசிய மில்லை. குழந்தைக்குக் களிப் பூட்டும் பொருட்டு நாம் மூடத்தனத்தில் இறங்க வேண் டியதில்லை. நாம் பேசவேண்டி யதைச் செம்மையான மொழி யால் திருத்தமாகப் பேசி அள வோடு நிறுத்திக் கொண்டால் அதுவே போதுமானது.

குழந்தையுடன் பழகும் போது எப்போதும் நாம் மறந்து போகிற மற்றொரு அம் சம், குழந்தையைப் பேணிப் பராமரிக்கும் பெற்றோர் முத லானோர் வேறு இருக்கிறார் கள், முழுமையும் நம் கடமை யன்று என்பது தான். குழந் தையின் வீட்டாருடைய நெருங்கிய நண்பர்களும், பிற உறவினரும் ஓரளவு அக்குழந் தையின் இளம்பருவப் பயிற்சி யில் பங்குடையவர்கள் என் பது உண்மை. ஆனால் இப் பயிற்சி முழுமையும் கிரம மான பழக்கத்தால் வரவேண் டுமேயன்றி குழந் தையைக் காணுந்தோறும் திருத்த முற்படும்செய்கையால் வருவதன்று. தினசரி நடை முறையையும் வேலைக்கிரமத் தையும் நடத்தையையும் பெற் றோர் முதலானவர்கள் கவனிக் கிறார்கள். இதற்கான பொ றுப்பு அவர்களுக்குத்தான். பழகுந்தோறும் நாமும் கலந்து அதிகாரம் செய்வது, நியாயமுமல்ல. "உங்கம்மா சொல்கிறபடி உங்கள் வீட்டில் செய்து கொள். இந்த வீட் டில் அதெல்லாம் வைத்துக் கொள்ளாதே. இங்கு நான் சொல்கிறபடிதான் செய்ய வேண்டும்" என்று நம் வீட் டிற்கு வந்த இடத்தில் பிறர் குழந்தையை அதட்டுவது ஹிம்சை செய்வதாகும்.

இத்தகைய மாறுபட்ட பயிற்சிப் போட்டி ஒரே வீட் டில் நடப்பதையும் பல சமயம் நாம் காணலாம். பெற்றோரும் பாட்டன் பாட்டியும் உள்ள வீட்டில் இந்தப் போட்டி அதி கம். குழந்தையின் பயிற்சிக்கு நியாயமான பொறுப்புடைய வர்கள் தாயும் தந்தையும்.

இவர்களிருவரும் ஒத்துக் குழந்தையை நடத்துவதே அருமை. அப்படியிருக்க வீட்டில் தாங்கள் பெரியவர்கள் என்ற நியாயம் பற்றிப் பாட்டனும் பாட்டியும் தங்கள் அதிகாரத்தை நிலைநாட்டப்பார்க்கிறார்கள். மாறுபட்ட அபிப்பிராயங்களைக் குழந்தை பார்க்கும் போதும் கேட்கும் போதும் மிக்க திகைப்படைகிறான். யார் சொல்லுகிறபடி நடப்பது சரி? யார் பேச்சைக் கேட்பது? மற்றவர்கள் கோபித்தால் என்ன செய்வது? இவை எல்லாம் அவன் மனதில் எழும் போராட்டங்கள். மாறுபட்ட அபிப்பிராயம் நமக்குத் தோன்றும் போதுகூட, அதைக் குழந்தையிடம் சொல்லாதபடி, பெற்றோரிடமே சொல்வதுதான் அறிவுடைமை. "அம்மாவை வேண்டுமானால் கேட்டுப்பார்" என்று சொல்வது அடுத்தபடி. அனுவசியமான தடை அல்லது தவறு என்று நாம் கருதுவது ஒரு சமயம் நீண்ட அனுபவத்தின் பிறகு அவசியமென்று பெற்றோருக்குப் பட்டு அதன்படி அவர்கள் செய்து வருவதாயிருக்கலாம்.

"உனக்கென்னடா தெரியும்? அனுபவமில்லை. என்னுடைய அனுபவம் எவ்வளவு தெரியுமா? என்ற தோரணையில் குழந்தையிடம் பேசுவது பெரிதும் பிழையானது. பெரியவர்களிடங்கூட இவ்விதம் பேசுவது தப்பானது. சாதாரணமாய்த் தெரியாததைப் பற்றிக் குழந்தையிடம் பேச வேண்டாம். அவனுக்குக் கிரமமாய்த் தெரியக் கூடியதைத் தெரிவிக்கக் கூடிய முறையில் அவனுடன் பேசுவது நல்லது. அவன் எழுதும் எழுத்து பேசும் பேச்சு பாடும் பாட்டு சித்திரம் வர்ணச் சித்திரம் நூற்கும் நூல் முதலிய எல்லா வேலைகளிலும் அவனுக்குத் தெரிந்ததையும் அவன் செய்ததையும் பற்றியே பேச வேண்டும். புகழும்போது பையனைப் புகழாமல் அவன் செய்த வேலையிலுள்ள சிறப்பைப் புகழ்வது நல்லது. சிறு குழந்தை பூரணமாக மனத்தைச் செலுத்தி ஒரு காரியத்தைச் செய்திருந்தால் அந்தக்காரியத்தில் செய்த அளவுக்கு ஏற்பட்ட பலனைப் பாராட்டுவது மிக்க அவசியம். உண்மையாகவே பையன் உழைத்திருந்தால் செயலில் விசேஷத் திறமையோ கலையோ காணப்பட்டாலும் பாராட்டலாம். பையனைப் பாராட்டும்போது அவனுக்குத் தன் நினைவு ஏற்படுகிறது; ஓரளவுக்குக் கூச்சமும் வெட்கமும் கூட ஏற்படும். இந்த வெட்கம் காரணமாக நாம் பேசும் பேச்சில் அவன் முழுமையும் கலந்து கொள்ள இயலாது. மற்றப்படி வேலையை நாம் பாராட்டும் போது, அவனும் தாராளமாய்ப் பேச்சில் கலந்து கொள்ள சந்தர்ப்

டம் ஏற்படுகிறது. இதுவே பிரதானம்.

அடிக்கடி நமக்கு ஏற்படுகிற ஒரு சந்தர்ப்பத்தை இங்கு ஞாபகப் படுத்தல் நல்லது. சில சமயம் நாம்* போய்க் கொண்டிருக்கும் போது எதிரில் நம்முடைய நண்பரையும் அவருடைய குழந்தையையும் சேர்த்துப் பார்க்கிறோம். அப்போது பேசுவது நமக்கு மிகவும் தொந்தரவான நிலைமை. சிலர் குழந்தையைப்பேச்சுக்கு இழுக்க வேண்டும் என்று எண்ணுகிறார்கள். இது சரியன்று. பெரியவர்களை முதலில் விசாரித்து விட்டுப் பிறகு குழந்தையை விசாரிப்பது முறை. குழந்தையிடம் பேசும் போது உபசாரத்திற்குப் பேசுவதாக அவனுக்குத் தோற்றுமல், அவனுக்குப் பிடித்தமான காரியம் எதையேனும் பற்றி ஆர்வத்தோடு கேட்பது நல்லது. அப்போது அவன் கூச்சத்தை விட்டு நம்மோடு தாராளமாகப் பேச ஆரம்பிக்கிறான். பிற்பட்டு நம் நண்பரோடு நாம் பேசிக் கொண்டிருந்தாலுங் கூட அவன் பொறுமையை இழக்காமலிருக்கிறான்.

ஏககாலத்தில் இருவரோடும் பேசுவது சாத்தியமில்லை. அதில் சுவையும் ஏற்படாது. மற்றபடி குழந்தையைக்கண்டு, என்னதான் வேலையிருந்தாலும் அவனோடு பேசாமல் நழுவுவது சரியன்று. பாராததுபோல் பேசாமல் போவது அவனை அவமதிப்பதாகும். குழந்தைகள் அவமதிப்பைச் சகிக்க மாட்டார்கள்.

பள்ளிக் கூட வாழ்க்கையிலும் குழந்தையின் செயலை மீறிய காரியங்கள் அநேகம் உள்ளன. இவற்றுக்காகக் குழந்தையைக் கேட்பது பொருத்தமாகாது. "பள்ளிக்கூடம் வர ஏன் நேரமாயிற்று?" என்று உபாத்தியாயர் கேட்பது சாதாரண வழக்கம். அநேக ஏழைக் குழந்தைகள் வீட்டில் சமயலுக்கு அதிக நேரமாயிருக்கும். இது பெற்றோர்களைக் கேட்கும் கேள்வியே தவிர, குழந்தைகளைக் கேட்கும் கேள்வியல்ல. தனக்குப் பொறுப்பில்லாதவற்றைப் பற்றித் தன்னைக் கேட்கும் போது, குழந்தைகளுக்கு மிகுந்த சங்கடம் ஏற்படுகிறது. இதை நாம் உண்டு பண்ண வேண்டாம். குழந்தையை வைத்துக் கொண்டு குழந்தையைப் பற்றிப் பேசுவது சரியல்ல. குழந்தைக்குப் புரியாத பாஷையில் பேசுகிறோம் என்று நாம் எண்ணுவது பொருந்தாது. தன்னைப் பற்றிப் பேசுவதைக் குழந்தை எப்படியோ கண்டு கொள்கிறான். என்ன பேசுகிறோம் என்று அறியாவிட்டாலும் ஏதோ பேசுகிறோம் என்று தெரிந்து கவனிக்கிறான். தன்னைப்பற்றிப் பேசுவதாலும், தனக்குப் புரியாதபடி

பேசுவதாலும் ஏதோ கெடுதல் தான் பேசுகிறார்கள் என்று அவனுக்கு மனதில் அச்சம் தோன்றுகிறது. இத்தகைய அச்சம், நேர்முகமாகச் சொல்லிக் கண்டிப்பதை விடக்கெடுதியானது. இது எப்போதும் குழந்தையின் மனதில் நீக்க முடியாத சங்கடத்திற்கு இடமாயிருக்கும். ஒவ்வொரு குழந்தையின் வாழ்க்கையிலும் செய்கையிலும் குறைபாடு உள்ளவைகள் சில இருக்கின்றன. இவற்றை நேரே சொல்வது முறைமை. இவற்றைப் பற்றித்தான் பேசுகிறார்களோ என்று அவன் சஞ்சலப்படும்படி விடுவது முறையன்று.

குழந்தை ஓடியாடி விழுவதும் காயப்படுத்திக் கொள்வதும் இயல்பானது. இதை விசாரிப்பதும், பெற்றோர்களுடன் கலந்து பேசுவதும், சாதாரணமாயிருக்க வேண்டும். மிகைப்படுத்திய கவலை காட்டக் கூடாது. காயத்தைச் சாதாரணமாகக் குழந்தைகள் வலி தெரியாதபடி நன்றாய்ப் பொறுத்துக் கொள்ளும். வலியினால் வரும் கஷ்டத்தைத் தன்னுடன் சுற்றியிருப்பவர் காட்டும் கவலையையும், பரிவையும் வைத்தே குழந்தை அளக்கிறான். அவனுக்கு அநுபவம் குறைவானதால், இது முதல் தான் கற்றுக் கொள்ள ஆரம்பிக்கிறான். ஆகவே, அனாவசியமாக "ஐயையோ! எங்கேயடா போய் முட்டிக் கொண்டாய்? மண்டை உடைந்து போயிற்றே, அடபாவி" என்று குழந்தையின் இளம் மனதில் பெரிய அதிர்ச்சியை உண்டு பண்ணுவது என்றென்றைக்கும் சேடானது. "ஓகோ, முட்டிக்கொண்டாயா? போகட்டும். கொஞ்சம் எண்ணெய் தடவி ஒத்துக் கொடுத்தால் சரியாய்ப் போய் விடும்" என்று மட்டும் சொல்லி இதனோடு விட்டுவிடுவது நல்லது. மேலும் அவசியமான வைத்திய ஏற்பாட்டைச் செய்து விட்டு வேறு சுவை மிகுந்த விஷயங்களை அவனுடன் பேசிக் கொண்டிருப்பது தான் இந்தச் சமயத்தில் அவனுக்கு நாம் செய்யத் தக்க நல்ல சேவை.

மிகைப்படுத்திய கவலை வருவதெல்லாம் குழந்தையினிடமுள்ள அளவுகடந்த ஆசை காரணமாகத்தான். குழந்தையின் நன்மையை உத்தேசித்துப் பெரியவர்கள் தங்கள் உணர்ச்சியை அடக்க வேண்டும். பாராட்டும் உணர்ச்சியை அடக்க வேண்டுவதில்லை. ஆனால் பரிதாபப்படும் உணர்ச்சியை வெளிக் காட்டாமல் மறைக்கத்தான் வேண்டும். அநேக துன்பங்களைக் குழந்தை தன் வாழ்க்கையில் பொறுத்துக் கொள்ள வேண்டியவன். குழந்தைப் பிராயத்திலேயே இந்த அற்பத்தையெல்லாம் ஏன் நாம் பெரிதாக்கிக் காட்ட வேண்டும்?

துன்பப்படும் போது குழந்தையின் மனத்தைப் பராக்காக வேறு சிந்தனையில் திருப்ப வேண்டியிருக்க, அநேக அன்பர்கள் அதே மாதிரி துன்புற்ற வேறு குழந்தைகளைப் பற்றி அவன் முன் சொல்லி அனுதாபப் பட்டுக் கொண்டேயிருக்கிறார்கள். இவர்களைத் துன்பப்படும் குழந்தைகளின் அருகே அண்ட விடாமலிருப்பது தான் இதற்குப் பரிகாரம்.

எல்லா நாட்டிலும் எல்லா மதத்திலும் குழந்தையையும் தெய்வத்தையும் ஒன்றாகப் பாவிக்கிறார்கள். தெய்வம் வரம் தரும் சாபம் தரும் என்பார்கள். குழந்தையும் ஏறக்குறைய அதே போல நிறைந்த இன்பத்தையும் துன்பத்தையும் அளிக்க வல்லது. இன்பம் மட்டும், பெற்றோர் மட்டுமல்லாமல், குழந்தையைச் சந்திக்கும் எல்லோரும் அனுபவிக்கக் கூடியது. குழந்தைகள் குழந்தை உலகத்தில் வாழவில்லை. பெரியவர்கள் உலகத்தில் கூடி வாழ்கிறார்கள். பெரியவர்களாக ஆவதற்குக் கற்றுக் கொள்கிறார்கள். கற்பிக்க வேண்டியது பெரியோர் கடமை. எனவே, நம்மோடு பழகுகிற எல்லாக் குழந்தைகளும் பூரணமான உள ஆரோக்கியமும் இன்பமும் அழகும் நிறைந்த வளர்ச்சியும் பெறும்படி அவர்களைப் பழக்குவதும் பயிற்றுவதும் நம் எல்லோருடைய கடமையாகும். சமூகத்தில் உள்ளோர் அனைவருக்கும் கூட்டாகவும் தனியாகவும் இக்கடமை உண்டு. எந்த அளவுக்குச் சமூகத்திலுள்ளவர்கள் கூட்டாகவும் தனிப்பட்ட முறையிலும் இந்தக் கடமையை நிறைவேற்றுகிறார்களோ அந்த அளவுக்கு எதிர்காலக் குழந்தையின் வாழ்க்கை இயல்பாகவே இன்பமும் பயனும் நிறைந்ததாக விளங்கும்.

(கலைக்கதிர்)

அறிவுக் கதிர்

பழைமைப் பித்தத்திலிருந்தேவகுப்பு வாதம் கிளம்பியிருக்கிறது. பழங்கால நோக்கில் விஷயங்களை அணுகுவதாலும், பழங்கால ஸ்லோகங்களைக் கோஷிப்பதாலுமே வகுப்புவாதத் தோன்றுகிறது.

— நேரு.

சாதாரண சம்பவம்

DRAS

"முனியாண்டி, முனியாண்டி." பதில் ஏதும் வரவில்லை. மறுபடியும் பக்கிரி கூப்பிட்டான். முனுசாமி வெளிக்கிளம்பாததால் படகுக் கொட்டகைக்குள் பக்கிரி நுழைந்தான். பொழுது விடிந்து பத்து நாழியாகியுங்கூட முனுசாமி கண் விழிக்கவில்லை. வைக்கோற் பரப்பின் மேல் முடங்கிக் கிடந்த முனியாண்டியைப் பக்கிரி தட்டி எழுப்பினான்.

"முனியாண்டி! மேஸ்திரி உன்னைக் கூப்பிட்டார்"

மேஸ்திரி என்றதும் முனுசாமியின் உறக்கமெல்லாம் எங்கேயோ பறந்து விட்டது. அவ்வளவு பயம் மேஸ்திரியிடம். வேலையாள் ஒருவனை மேஸ்திரி கூப்பிடுகிறாரென்றால் ஏதாவது குற்றத்தைக் கேட்பதற்குத்தான். உதை கிடைக்கும், அபராதம் விழும், சில சமயங்களில் வேலை போய் விடும்.

"ஏன்?.. ஏன் மேஸ்திரி கூப்பிட்டார்?" என்று முனுசாமி அவசரப்பட்டான்.

"ஒன்றும் ஆபத்தில்லை. உனக்கு உடுப்புத் தைத்து வந்திருக்கிறது. அதை எடுத்துப் போகத்தான். நாளையிலிருந்து எல்லோரும் வெள்ளையும் சள்ளையுமாக இருக்க வேண்டுமென்று மேஸ்திரி சொன்னார். இந்தச் சங்கம் ஆரம்பித்து இருபத்தைந்து வருஷமாகிறதாம்."

முனுசாமி பயம் தெளிந்து மறுபடியும் படுத்தான்.

"அதற்காகக் கொண்டாட்டம் வருகிற ஞாயிற்றுக் கிழமையாம். எல்லா எசமானர்களும் வருவார்களாம். தோட்டத்தைக் கூட்டி, பூந்தொட்டிகளை இடம் மாற்றி வைக்கும்படி மேஸ்திரி அதட்டினான். கூலியாட்கள் வேறு வருகிறார்கள்."

"நான் என்ன செய்யணும்" என்று முனுசாமி வினவினான்.

"வெள்ளிக்கிழமை படகுப் போட்டியாம். உன்னை மேஸ்திரி வரச் சொன்னார். சீக்கிரம் போ. அவன் முரடன். தூங்கி விழுகிறதைப் பார்த்தால் முதுகுத்தோலை அகற்றி விடுவான்."

முனுசாமி சஞ்சலப் படவில்லை. "என்ன கொண்டாட்டமோ நம்திண்டாட்டம் தீரவில்லையே. குப்பத்துக்கடையில் அரிசி வந்ததா?"

"காலையில் கூடப்போனேன் நாற்பது பேரோடே நானும் வரிசையில் காத்துக் கிடந்தேன். கடையைத்திறந்து, கையை விரித்து, "நாளைக்குத் தான் அரிசி வரும்" என்றான் கடைக்காரன். ஒரு வாரமா அரிசியில்லையாம்." 'ஆக இன்றைக்கும் பட்டினிதான். பட்லரைக் கேட்கலாமா?"

"எல்லாச் சாமானையும் ஸ்டோர் ரூமில் மேஸ்திரி பூட்டி விட்டான். விருந்து நாளைக்குத் தான் திறப்பான். கஞ்சப்பயல். கஞ்சிக்கில்லாமல் தவிப்பதை அவனிடம் சொல்லவோ நமக்குப் பயம். சரி தான், விருந்து வரைக்கும் பொறுத்துக் கொள்வோம் அப்புறம் ஒரு வாரத்திற்குப் பழமும் பிஸ்கோத்தும் பஞ்சமின்றிக் கிடைக்கும்.'

'கொண்டாட்டம் என்றைக்கு?'

'வருகிற ஞாயிற்றுக் கிழமை.'

'இன்னும் நாலு நாள் இருக்கிறதே' என்று முனுசாமி தனக்குப் போட்டான்.

'நாழியாச்சு. மேஸ்திரி கண்டால் வைவான். தோட்டத்து வேலை தவக்கப்படும்' என்று பக்கிரி போனான்.

பக்கிரி வெளியேறியதும் முனுசாமி படுக்கையை விட்டு எழுந்தான். உடம்பெங்கும் வலியும், தலை கனமாகவும் இருந்தது. காய்ச்சலாக இருக்குமோ என்று தன்னைத் தானே தொட்டுப் பார்த்தான். ஒன்றும் தெரியவில்லை. இன்னும் நான்கு நாட்களில் கொண்டாட்டம் வருகிறது. விருந்து வேடிக்கை, படகுப் போட்டி, விளையாட்டுக்கள் எல்லாம் வரும். படகுப் போட்டியில் தனக்குள்ள முக்கியத்துவத்தை நினைத்து மகிழ்ந்த வண்ணம் முனுசாமி நடந்தான்.

* * *

அடையார் கடலோடு கலக்குமிடம் பார்ப்பதற்கு அழகாயிருக்கும். பரந்த நீர்ப்பரப்பு அதையடுத்து வளைந்த அடிவானத்தைத்தொடுகிற விரிந்த கடல் பாலத்திலிருந்து பார்த்தால் அமைதி மிக்க வெளி புனல் பரப்பின் பின் அலை மோதுகிற நீலக்கடல் தெரியும். இருமருங்கிலும் பசுமை உமிழும். மரங்களின் தொகுதியும், இடையிடையே பளிங்குக் கட்டடங்களும் தெரியும். மிகச் சமீபத்திலிருப்பது போலத் தோன்றினும், அங்கிருப்பவர்கள் தூரத்திலும் தூரத்திலும் வெகு தூரத்திலிருப்பவர்களே பாலத்திலிருந்து சிறிது தூரம் வந்தால் 'சென்னை உல்லாச சங்கம்' என்ற வழிகாட்டியைப் பார்க்கலாம். பிரசித்தி பெற்ற அச்சங்கம் இருக்கும் திக்கைப் பலர் ஆச்சரியத்துடன் உற்று நோக்கியிருப்பார்களே தவிர,

அந்த வழிபோக உரிமையுடையவர்கள் மிகச்சிலரே. அடையாரிலுள்ள உல்லாச சங்கத்தின் அங்கத்தினரென்பதே மதிப்பு வாய்ந்த அடைமொழியாகும். அந்தச் சங்கத்தில் இருநூறிலிருந்து மூந்நூற்றுக்குள்ளாகவே அங்கத்தினர் இருப்பார்கள். அவர்களில் சிலர் ஆண்டுக் கொருமுறை அந்தப் பக்கம் வருவார்கள். அடையார் பக்கமே வாராதவர்கள் கூட இருப்பார்கள். பலன் கருதியல்ல. அந்தப் பதவி குறித்துஎப்பொழுதும் பலத்த போட்டி இருந்தது. கவர்னருடன் பேட்டி, புதுக்கம்பெனி துவக்கம், ஆலை, பாங்கி அமைத்தல், அனைவற்றிற்கும் அடையார் உல்லாச சங்கம் என்ற அடையாளச் சீட்டு இருந்தால் போதும். அரசாங்க நிர்வாகத்தையும், மந்திரி சபைகளையும் கண்காணித்து வருமளவுக்கு உல்லாசச் சங்கம் உயர்ந்திருந்தது. சென்னை மாகாணத்திலுள்ள பெரும் ஜமீந்தாரர்கள், மிட்டாதாரர்கள், ஆலையரசர்கள் அனைவரையும் அச்சங்கத்தின் அங்கத்தினர் வரிசையில் காணலாம். ஐம்பது கிராமம், ஐயாயிரம் ஏக்கர், அறுபது லட்சம் என்று குறைந்த அளவுக்காவது அந்தஸ்து இருக்க வேண்டும். சர்க்கார் ஆதரவுடையவர்கள், சட்ட நிபுணர்கள், சலியாத வருவாயுடையவர்கள் இவர்களுக்கும் இடமிருந்தது.

உல்லாசச் சங்கம் என்று பெயரில் மட்டுமல்ல, உள் நுழைந்ததும் உல்லாச புரிக்குப் போவது போலத்தான் இருக்கும். அவ்வளவு பொழுது போக்கு வசதிகளும் அங்குச் செய்யப் பட்டிருந்தன. ஓய்வு நேரத்தின் உல்லாசத்தை அனுபவிக்க ஏற்பட்ட சாதனங்களில் அடையார் நீர்ப்பரப்பில் உலவிவரும் உல்லாசப் படகு ஒன்று. படகு என்றால் கடலில் தத்தளிக்கும் கட்டுமரம் போன்றதல்ல, ஒரு படகே ஐயாயிரம், ஆறாயிரம் என்று விலையிருக்கும். அவைகளில் தனிப்படகு, சிறு படகு, பெரியவை என்று பல விதமிருந்தன. உல்லாசப் படகுகளைச் சரிவர பாதுகாத்துவருவதற்காக நியமிக்கப்பட்ட படகோட்டியே முனுசாமி.

முனுசாமி என்பது பெயர். முனியாண்டி என்றும் அழைப்பார்கள். வயது இருபதிலிருந்து இருபத்தைந்து வரை இருக்கும். திட்டமாக சொல்லமுடியாது அவனுக்கே சரியான வயது தெரியாது. சென்சஸ் சமயத்தில் வயது கேட்ட பொழுது முனுசாமி தலையைச் சொரிந்துக் கொண்டு கிடையாது என்றான். பெற்றோரின் பெயர்களுக்கும் அதே பதில் தான் வந்தது. ஆதி அந்தமில்லாமல் முனியாண்டி வளர்ந்தவன். அதைப் பற்றி அவன் கவலைப் படட இல்லை. பிறப்பும் பூர்வோத்திர

மும் தெரிந்து ஆகவேண்டிய காரிய மொன்றுமில்லை. வம்சாவளி தெரிந்து எந்த ஜமீன் சொத்து வரப் போகிறது. தெரிந்தால் அவனுக்குப் பிடிக்காதவர்கள் தொகையில் இருவர் அதிகரிப்பார்கள். குப்பத்தில் வழங்குவது போல அடையார் தண்ணீரில் வளர்ந்தவனே முனுசாமி. சிறு வயதில் சுற்றித் திரிந்தான். வேலியடைத்தல், புல் சேகரித்தல், கடலை விற்றல் இப்படிப் பல தொழில்களில் ஈடுபட்டபின், சட்டுமரமேறி கடலில் சுழன்றான். பின் அடையார் உல்லாச சங்கத்தில் டென்னிஸ் கோர்ட் பையனாகச் சேர்ந்தபின், படிப்படியாக உயர்ந்து பட கோட்டியாக ஆனான்.

படகுச் சங்கத்தில் முனியாண்டிக்கு வேலை அதிகமிருக்காது. காலையில் எழுந்ததும் படகுகளை உலர வைத்து, வர்ணம் பூசி, கைப்பிடிகளைத் துடைத்து, கொக்கி முதலியவைகளைப் பள பளப்பாக்கி வைப்பான். மாலை நான்கு மணிக்குத்தான் அங்கத்தினர்கள் வருவார்கள். தன் உடுப்புகளை அணிந்து வருபவர்களுக்குச் சலாம் வைத்து அவர்களுக்கு உதவுவான். 'யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே' என்பதைப் போல கனமான பெரிய மனிதர் வருவதை அவர்களின் மோட்டார் சத்தமே அறிவித்து விடும். கார் சத்தம் காதில் விழுந்தும் வருபவர் யாரென்று தெரிந்து கொண்டு, அவருக்கேற்ற படகைத் தயாரிப்பான். படகுகளில் போக விரும்புபவர்களனைவரும் படகு தள்ள விரும்புவதில்லை சிலரை முனியனே படகில் வைத்துச் சுற்றி வருவான். கரையில் சேர்ந்ததும் அவர்கள் விட்டெறிந்த நாலணாவில் திருப்தியடைந்து விடுவான். ஒன்றும் கொடுக்கா விட்டால் கூட முனியாண்டி வருத்தப் படுவதில்லை. அவர்கள் போனதும், கீழே கிடக்கிற சிகரட் துண்டுகளைப் புகைத்து, அதிலிருந்து வருகிற புகை வளையத்தில் ஆழ்ந்து விடுவான். சிகரட் துண்டுகள் மட்டுமல்ல, அவர்கள் விட்டுப் போகிற தொப்பி, சால்வை முதலியவைகளும் முனியாண்டிக்குச் சொந்தமாகி விடும்.

பெரிய மனிதர்களுடன் பழகியதால் அவர்களுடைய பழக்கமும் முனியாண்டிக்கு வந்து விட்டது. காலையில் பைஜாமா, பொத்தான் நிரம்பிய நீண்ட சட்டை, மெல்லிய தொப்பி இவைகளுடன் சுற்றி வருவான். புகையிலே யிருந்தால் புகை குடிப்பான். வெய்யில் அதிகமானதும் விளிம்பு கனமான தொப்பியையும், மாலையில் இலேசான தொப்பியையும் அணிந்து வந்தான். அவை அழுக்கேறியும் கிழிந்தும் காணப்பட்ட போதிலும்

அவற்றிற்குரிய அந்தஸ்தைக் காப்பாற்ற முனியன் கஷ்டப்பட்டான். கூடியவரையில் ஆங்கிலத்திலேயே பதிலளிப்பான். புரிந்ததோ, புரியவில்லையோ, யூகத்தின் மூலம் சமாளித்துக் கொள்வான்.

ஆனால் ஒரு முறை அவனது யூகம் பிசகிவிட்டது. காரிலிருந்த பிரவுனி என்ற நாயை எடுத்துவரச் சொன்னார் ஒருவர். முனியாண்டி போய் மிஸ் பிரவுன் என்பவரை அழைத்து வந்தான். நாய்க்குப் பதிலாக நங்கை வந்ததைப் பார்த்து அக்கனவான் திகைத்துப் போனார். இருந்தபோதிலும் சமாளித்துக் கொண்டு அம்மையாருடன் படகில் புறப்பட்டார். முனியாண்டியைக் கடிந்த போதிலும், உள்ளூர திருப்தியே அடைந்தார் அக்கனவான்.

விளையாடுகிற குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சியடைகிற தாயைப்போல,தண்ணீரில் தவழ்ந்து வருகிற உல்லாசப் படகுகளைக்கரையில் நின்றபடி முனியாண்டி பார்த்து மகிழ்வான். சில சமயங்களில் திடீரென்று பழைய நினைவுகள் வரும். கடலில் மீன் பிடிக்கப் போகும் பொழுது அவர்கள் பட்ட துன்பங்களெல்லாம் அவன் மனக்கண் முன் தோன்றும். அவனை அறியாமலே திகிலுடன் கடலை நோக்குவான்.

ஒன்றுக்கொன்று மிக அருகேதான் இருந்தன. ஆனால் எவ்வளவு வேற்றுமை. குமுறுகிற கடல். அமைதியான நீர்ப்பரப்பு. காலை உதயத்துக்கு முன் கட்டுமரத்திலேறிக் கடலினுள் நுழைவது. கால்வயிற்றுக் கஞ்சிக்காக- மாலை நேரத்தில் இவர்கள் உலவுவது உல்லாசத்திற்காக. கட்டு மரம்— உல்லாசப்படகு. இரண்டும் முற்றிலும் மாறுபட்டிருந்தன. கட்டு மரத்திலேறியவன் சிறிது தவறினால் போதும், சுறாமீனுக்கு இரையாகி விடுவான், அலைகள் அவனை அணைத்துக்கொள்ளும், அப்புறம் அவனைப்பற்றி எத்தகைய அடையாளமும் அகப்படாது. தண்ணீருக்குக் கீழேயிருந்து, தாயையும் மனைவியையும், தனயனையும் தன்னையும் நினைத்து விடுகிற கடைசி மூச்சுகூட நீர்க் குமிழியாகி உடைந்து விடும்.

அலைகடலில் வலைவீசி வாழ்பவர்கள் அவர்கள்; பிறரின் அமைதி வாழ்வில் வலைவீசி, அதனால் அலைகளை எழச் செய்து, வாழ்க்கை நடத்துபவர்கள் இவர்கள்; சுறாமீனுக்கு அஞ்சியோடும் பரதவரும், வாழ்க்கை வெளியில் சுறாமீன்களாகக் காட்சியளிக்கும் சுகபோகிகளும். கட்டுமரத்திலேறிக் கஷ்டப்பட்டவர்கள் உதிர்த்த வியர்வையினால்தான் போலும் கடல் நீரே உப்பாகிவிட்டது!

குப்பத்தையும் அதிலுள்ள குள்ள உருவங்களையும், தன் முன்னே உலவிடும் கனதனவான்களையும், அவர்கள் ஏறி வந்த கவர்ச்சிமிக்க கார்களையும் பார்க்கும் பொழுது, இரண்டுக்கும் உள்ள வேறுபாடுகள் மட்டுந்தான் முனிசாமிக்குத் தெரிந்தது. தான் மாத்திரம் கட்டுமரத்திலிருந்து தப்பிக் கனதனவான்களுக்கு அருகில் வந்துவிட்டதாக நினைத்து அவன் கவலை நீங்குவான். உழைப்பில்லாது ஓய்வு பெறுகிற கனதனவான்கள் இருக்கிற வரையில் கட்டுமரத்திலேறுபவனுக்கு உல்லாசப் படகில் ஏற அனுமதி கிடைக்காது என்பது முனியாண்டிக்குத் தெரியாது.

* * *

சங்கத்தின் இருபத்தைந்தாம் ஆண்டுவிழா வருகிறது. படகுப்போட்டி, பந்து விளையாட்டுகள். விருந்து, நடனம், முதலியன அறிவிக்கப்பட்டிருந்தன. விழா என்றவுடன், கொண்டாட்டத்திற்கு வருபவர்கள் கொடுக்கும் இனாம்களை முனுசாமி கணக்கிட ஆரம்பித்தான். கொண்டாட்டத்தையும், இனாம்களையும் நினைத்தபொழுது முனுசாமி உற்சாகமடைந்த போதிலும், அவனுடைய மனச்சோர்வும், உடல்களைப்பும் குறையவில்லை. ஒருவாரமாகக் குப்பத்துக் கடையில் அரிசியைக்காணோம். சங்கத்திலும் ஏதும் கிடைப்பதில்லை. விருந்து என்பதற்காக உணவுப் பொருள்களெல்லாம் சேமித்து வைக்கப்பட்டிருந்தன. வயிறு தாறுமாறுகத் தாளம்போடுகிறநேரத்தில் வருங்காலத்தைப் பற்றிய எந்த ஆசை நினைவுகளும் இனிய இசையை எழுப்புவதில்லை. எனவே முனுசாமி உற்சாகமின்றியே வேலை செய்தான்.

படகுப் போட்டியன்றுகூட அவனிடம் பரபரப்பு எழுவில்லை. வாடி வதங்கியிருந்தான். போட்டி நடக்கும் பொழுதுகூட மற்றவர்களைப் போல ஆரவாரம் செய்யவில்லை. அன்றைக்கு அதிகமான அங்கத்தினர்கள் வந்திருந்ததால் ஒன்றிரண்டு தவிர மற்றெல்லாப்படகுகளும் தண்ணீரில் மிதந்து கொண்டிருந்தன.

போட்டிகள் முடிந்த பொழுதுசாய்கிற நேரத்தில் திடீரென்று மழை பெய்ய ஆரம்பித்தது. குமுறிக் கொண்டு காற்றும் மழையும் பலமாகத் தாக்கியதால் படகுகள் சிதறின. அன்றியும் தூரத்தில் இருந்தவர்களால் படகுக் கட்டிடத்திற்கு வரமுடியவில்லை. கரைக்குப் பக்கத்தில் வந்ததும், கரைக்குத் தாவி சீக்கிரம் போய் விட்டனர். தனியே விடப்பட்ட படகுகள் காற்றிலும் மழையிலும் கரையைவிட்டு நழுவி உள்செல்ல

ஆரம்பித்தன. பலமான மழையிலும் படகுக்குள்ளும், படகிலிருந்தது தோல்மெத்தை யாதலால், தண்ணீர் கசிக்க ஆரம்பித்துவிடும். எனவே சிதறிக் கிடக்கும் படகுகளைக் கொட்டகைக்குள் கொண்டு வரவேண்டிய வேலையில் முனியாண்டி ஈடுபட்டான்.

கடைசிப் படகைக் கொட்டகைக்குள் தள்ளி முடிப்பதற்குள் முனுசாமி முற்றிலும் சோர்ந்துவிட்டான். தலையைத் துடைத்துப்படுத்தான். உடம்பு குளிரால் சில்லிட்டு எலும்புகள் நொருக்கப்படுவது போலிருந்தது. பசி வேறு வயிற்றைப் பிறாண்டிக் கொண்டிருந்தது. மழை வந்து எல்லோரும் அவசரமாகப் போய்விட்டதால், அவனுக்குக் கிடைக்கும் வழக்கமான இறும் கூட கிடைக்கவில்லை.

காலையில் முனுசாமியால் எழுந்திருக்க முடியவில்லை. புகைந்து கொண்டிருந்த காய்ச்சல் அனல் போலக் கொதிக்க ஆரம்பித்தது. முதல் நாளிரவு மழையிலும் காற்றிலும் ஊசலாடியதால், தலை கனத்து உடம்பில் வலி அதிகமாக இருந்தது. பக்கிரியின் தூண்டுதலால் பக்கத்திலிருந்த ஆஸ்பத்திரிக்குப் போனான். சிறிய கண்ணாடிக் குச்சியை அவன் வாயில் நுழைத்தார் டாக்டர். அதை எடுத்துப்பார்த்து தலையசைத்தார்; பின் நாக்கை நீட்டச்சொல்லி, மருந்தை எழுதிக் கொடுத்தார். கம்பவுண்டரும் மருந்தைக் கொடுத்து, சாப்பிடும் முறையையும் சொன்னான். 'மூன்று வேளை சாப்பிடு, போ'' என்றான். முனுசாமி நகர்ந்ததும் மறுபடியும் கம்பவுண்டர் கூப்பிட்டான் 'அரிசிக்கஞ்சி மாத்திரம் சாப்பிடு. கண்டதைச் சாப்பிடாதே' என்றான்.

'அரிசிக் கஞ்சிக்கே ஆலாய்ப் பறக்குது. கண்டதைச் சாப்பிட என்ன இருக்குது' என்று முணுமுணுத்துக் கொண்டே முனுசாமி போனான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் படகுக்கொட்டகைக்குள் போய் முனுசாமி படுத்துக் கொண்டான். அவனுக்கருகிலிருந்த மருந்து பாட்டில் காலியாக இருந்தது. ஆனால் அவன் மருந்து சாப்பிடவில்லை. அரிசிக்கஞ்சி சாப்பிட்ட பின் தானே மருந்து சாப்பிடச் சொன்னார்' என்று நினைத்து அடையார் தண்ணீரில் மருந்தைக் கொட்டிவிட்டான். அதற்குப்பதிலாக அடையார் தண்ணீரில் இரண்டு கை குடித்துவிட்டுப் படுத்தான்.

* * *

மாலை நான்கு மணியிலிருந்தே கார்கள் வரத்தொடங்கின. புதிய அழகிய கார்கள், மின்னிடும் பல்வேறு வண்ணங்களில் தண்ணீரில் மிதந்து வரும் பறவைகளைப்போல எவ்வித சத்

தரும், கஷ்டமும் இன்றி ஓடி வந்தன. வரவேற்புக்கு நிறுத்தப்படும் ராணுவ அணிவகுப்பைப்போல பாதை இருமருங்கிலும் கார் வரிசை நிறைந்துவிட்டது.

விழாவிற்குத் தலைமை வகிக்க டெல்லியிலிருந்து பிரபல கோடீசுவரர் வந்திருந்தார். உல்லாசச் சங்கத்தின் விழாவிற்காக மட்டுமல்ல, அடையாரில் கூடிய அகில உலக ஆத்மஞான சங்கத்தின் பதினைந்தாவது மகாநாட்டில் கலந்துகொள்ளவும் அவர் வந்தார். அந்த மகாநாட்டில் அவர் திறப்பு விழாவாற்றினார். ஆத்மஞான மகாநாடு அடையாரின் மறுகரையில் கூடியது. உல்லாசச் சங்கத்தின் அங்கத்தினரில் பெரும்பாலோர் ஆத்மஞான மகாநாட்டில் கலந்துகொண்டபடியால் ஒன்றுக்கொன்று அழகும் விளக்கமும் கொடுத்தன.

விழா மண்டபம் ஆடம்பரமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. விழாவிற்கு வந்திருந்தவர்களும் தங்களை நன்றாக அலங்கரித்துக்கொண்டு வந்தனர். எத்தகைய குறையுமின்றி விருந்து நடந்தது. விருந்து முடிவில் தலைவர் எழுந்து சில பேசினார், புதிதாகக் கிடைத்துள்ள சுதந்தரத்தைச் சிதறவிடாதபடி பாதுகாப்பதற்கும் நாட்டின் பொருளாதாரத்தை அதிகப்படுத்தவும் சர்க்கார் முன்யோசனையுடன் நடக்க வேண்டுமென்றும், வருமான வரி, டாரிப், நிதி மிச்சம் இவைகளைப் பற்றியும் பேசினார். மேலும் உணவுக்கட்டுப்பாடுகள் நீங்கினால் உணவு உற்பத்தி பெருகி, பஞ்சம் தீருமென்றும் கூறினார். பரிதாபத்துக்குரிய பத்திரிகை நிருபர்களைத் தவிர அங்குக் கூடியிருந்தவர்களுக்குத் தலைவரின் பேச்சில் புதிதாக எதுவும் தோன்றவில்லை. உணவுக் கட்டுப்பாடுகள் முதலியன நீங்கவேண்டும் என்று வாய்வேதாந்தம் நிகழ்த்துவதோடு நிற்பதல்ல, சொல்வதைச் செயலில் காட்டவேண்டுமென்ற உயர்ந்த எண்ணத்தின் மீது, நடைமுறையில் கட்டுப்பாடுகள் இல்லாவிட்டால் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமோ அவ்வளவு ஒழுங்குடனும் நீதியுடனும் நடப்பவர்களே அங்கு குழுமியிருந்தவர்களில் பெரும்பாலோர். சொல்லாமலே செய்யும் பெரியோர்களிடம் அதிகம் சொல்லிப் பயனில்லை என்று நினைப்பவர்போலத் தலைவர் தன் உரையை முடித்துக்கொண்டார். எல்லோரும் விருந்து மண்டபத்தை விட்டு வெளியேறினார்கள். பலர் பக்கத்திலிருந்த கட்டடத்தில் நாட்டியம் காணச் சென்றார்கள். சிலர் தோட்டத்துக்கும் ஆத்மஞான மகாநாட்டில் நடந்துகொண்டிருந்த சொற்பொழிவுக்கும் போனார்கள்.

மண்டபத்தை விட்டு விருந்தினர் நகர்ந்தது தான் தாமதம். புலிகளைப் போலப் பதுங்கிக் கொண்டிருந்த வேலைக்காரர்கள் அனைவரும் மேஜைகளைச் சுத்தம் செய்ய முற்பட்டனர். ஒவ்வொருவருக்கும் ஆசை தீர உண்ணுமளவுக்கு அதிகமாகவே கிடைத்தது.

தனக்குக் கிடைத்ததை எடுத்துக் கொண்டு பக்கிரி வெளியே வந்தான். எதிர்பாராத விதமாக அவனுக்கு இரண்டு மேஜைகள் கிடைத்தன. தனக்குக் கிடைத்த தின்பண்டங்களைப்பற்றியும், வெண்ணெய் ரொட்டி பழம் இவைகளைப்பற்றியும் நினைத்து மகிழ்ச்சி அடைந்தான். தின்பண்டங்கள் சீக்கிரம் கெட்டு விடும், பழத்தைக் காலையில் தின்று விடலாம், ரொட்டி இரண்டு மூன்று நாளைக்குவரும் என்று கணக்குப் போட்டான். திடீரென்று முனியாண்டியின் ஞாபகம் அவனுக்கு வந்தது. நேற்றுக் காலையில் காய்ச்சலுடன் பார்த்தது தான். மேலும் விருந்து மண்டபத்தில் எல்லோரும் பங்கெடுத்துக் கொண்டபோதுகூட முனியாண்டி வரவில்லை. முனுசாமியைப்பார்த்து, ஒருரொட்டியும் பழமும் கொடுக்கலாம் என்று பக்கிரி நினைத்தான்.

நல்ல நிலவு இருந்துங் கூட கட்டிடத்தின் உள்ளும் புறமும் மின்சார விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. கட்டிடத்திற்குள் நடனக் கச்சேரி நடைபெற்றுக் கொண்டிருந்தது. நடனத்தின் மேன்மையிலும் நடனமாடுபவரின் மென்மையிலும், இசையிலும், அழகிலும் அனைவரும் ஈடுபட்டிருந்தனர்.

நிலவொளியில் பலர் சுற்றிக் கொண்டிருந்தனர். சாய்வு நாற்காலிக் கூட்டங்கள் சிதறியிருந்தன. சிகரெட் புகை எழுவது நன்றாகத் தெரிந்தது, ஆனால் மேஜையின் மேல் வைக்கும் பொழுது உண்டான கண்ணாடிக் கோப்பைகளின் சத்தத்தை சிரிப்பொலி அடக்கி விட்டது.

அடையாறின் மறுகரையில் ஆத்ம ஞான மகா நாட்டினர் சாப்பாட்டுக்கு முன் விட்டுப் போன விஷயத்தைச் சாப்பாடு முடிந்ததும் மடிபடியும் விவாதித்தனர். "ஆன்மாவும் கர்ம வினையும்" என்பது பற்றி மிக உயர்ந்த முறையில் ஆகம, உபநிஷத் ஆதாரங்களுடன் விளக்கப்பட்டது. விவாதம் விவாதத்திற்காக என்ற தன்மையில் பொழுது போய்க்கொண்டிருந்தது.

எல்லோரும் கவலையற்ற தன்மையில் இருந்தனர். பக்கிரிக்கும் நிலைகொள்ள வில்லை. புதையல் எடுத்தவன் போல மூட்டையை எடுத்துப் போனான். படகுக் கொட்டகைக்கருகில் போனதும் சிரிப்புச் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்

தான். தான் தூக்கிப் போகிற உணவு மூட்டையைப் பார்த்து தான் சிரிக்கிறார்களோ என்று அவனுக்குச் சந்தேகம். சிறிது நேரம் நின்று விட்டு மறுபடியும் நடந்தான்.

படகு, கொட்டகையை நெருங்கியதும் 'முனியாண்டி, முனியாண்டி, என்று கூப்பிட்டான். பதில் ஏதும் வரவில்லை. கொட்டகைக்குள் போய் விளக்குப் போட்டான். வைக்கோல் பரப்பின் மேல் முனுசாமி முடங்கிக் கிடந்தான்.

பாவம்! அவ்வளவு காய்ச்சல். காற்று அடிக்காதபடி கதவை மூடிவிட்டு, முனியாண்டியின் பக்கத்தில் பக்கிரி உட்கார்ந்தான்.

'முனியாண்டி, முனியாண்டி' என்று தட்டினான். நல்ல தூக்கம். காலைத் துணியால் மூடிவிட்டு கையை எடுத்து வைத்தான். பக்கிரிக்குத் திடீரென்றது. கண்ணைத் திறந்து பார்த்தான் - மார்பைத் தொட்டுப் பார்த்தான். பலனில்லை உடம்பு குளிர்ந்து விட்டது.

பக்கிரிக்கு என்ன செய்வது என்று புரிய வில்லை. யாரிடமாவது சொல்லலாமா வென்றால், விழாச் சமயத்தில் இழவுச் சேதியா. என்று எரிந்து விழுவார்கள்.

வெளியில் வந்து பார்த்தான். இசை, நாட்டியம், சிரிப்பு, சிட்டாட்டம், அக்கரையில் ஏதோ கூட்டம் எல்லாம் நடந்தபடி இருந்தன. ஓரேயடியாகக் கூச்சல் போட்டு நிறுத்தலாமா என்று நினைத்து வாயைத்திறந்தான், அழுகை தான் வந்தது. இவ்வளவு நல்ல சமயத்தில் முனியாண்டி ஏன் இறந்தான் என்று அவனுக்குப் புரியவில்லை.

கவலையற்ற நேரம், களி துள்ளிடும் இசை, ஆனந்தமான ஆடல் பாடல், அக்கரையில் ஆத்மவிசாரணை, உயர்தர விருந்து. வந்திருந்தவர்களோ பெரிய மனிதர்கள். எந்த இடத்திலும் குறை இருப்பதாகத் தெரியவில்லை. எங்கும் குதூகலமும், பரபரப்பும், அழகும் அமைதியும் குடிகொண்டிருந்தன. இவைகளின் மத்தியில் முனியாண்டிக்கு வாழ்வில் சலிப்பு வந்து விட்டது. எல்லாவற்றையும் புரிந்து கொண்டவன் போலப் பிரிந்து விட்டான்.

இளம் வயதில் திடீரென்று முனியாண்டி இறந்து போவான் என்று பக்கிரி கொஞ்சங்கூட எதிர்பார்க்கவில்லை, கெட்ட காரியங்களுக்கு முன் சகுனங்கள் தோன்றும் என்பார்கள். உள்ளங்கை அரிக்கும், குடிசையின் உச்சியில் கோட்டான் கூவும், காற்றடித்துக் கைவிளக்கு நின்று விடும், கண் புருவம் துடிக்கும். என்பார்கள். ஆனால். கனவும் பல்லியும் கூட பக்கிரி

யை எச்சரிக்கை செய்யவில்லை. மாறாக நிலவு நன்றாகப் பிரகாசித்தது. விளக்குகள் ஒளி விட்டன. நாட்டியம் நடைபெற்றது. அதில் தாளம் தவறவில்லை, நரம்பு அறுந்து போகவில்லை. இசை இனிமையாகவே இருந்தது. ஆத்மஞான மகா நாட்டினரின் ஆன்மாவைப் பற்றிய விவாதம் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது.

அரசர்களுக்கு ஆபத்து வந்தால் வால் நட்சத்திரம் தோன்றும் என்பார்கள். கதாநாயகனுக்குத் துன்பம் வந்தால் முன்பின்னறியாத பூவும் புள்ளும் அழும் என்று காவியங்கள் கூறுகின்றன. அசாதாரணமான சம்பவங்கள் நிகழவிருந்தால் இயற்கை உற்பாதங்கள் தோன்றுமென்பது நம்பிக்கை. ஆனால் ஏழைகள் இறக்கும் பொழுது எத்தகைய அபசகுனங்களும் உண்டாவதில்லை, அது சாதாரண சம்பவம்.

"ஆரம்பக் கல்வி" ஆபீஸ்

94-95, புதுத் தெரு, மண்ணடி, சென்னை, 1.

மாதாந்திர கணக்கு அனுப்பும் பாரங்கள் (ஆங்கிலம்)	100	ரூ.	2-8
ரிகார்ட் ஷீட்டுகள் (ஆங்கிலம்)	100	ரூ.	2-0
பிராவிடண்ட் பண்டு கட்டும் பாரங்கள் (ஆங்கிலம்)	100	ரூ.	2-0
பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத்தாள்கள் (ஆங்கிலம்)	100	ரூ.	1-0

(தபால் செலவு உட்பட)

ஒவ்வொன்றிலும் 25 பாரங்களுக்குக் குறையாமல்

முன்பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

சிந்திக்கத் தூண்டிய சீர்திருத்தவாதி !

மா. இளஞ்செழியன் B. A. (Hons) ஆசிரியர் 'போர்வாள்'

"கேட்டீர்களா அக்கிரமத்தை! மதத்தை அல்லவோ தாக்குகிறானாம் அந்த மாபாவி!"

"மதத்தை மட்டுமா தாக்குகிறான்! சீமான்கள் மட்டும் சுக வாழ்வு வாழ என்ன தனியுரிமை படைத்தவர்கள் என்று கூடக் கேட்கிறானாம்!"

"எல்லாரும் இந்நாட்டு மன்னராம்! பிறக்கும் போது சகலரும் சுதந்தரமாகத்தான் பிறக்கிறார்களாம்! மனிதருக்கு மனிதர் ஏற்றத் தாழ்வு கிடையாதாம்! ஏதேதோ பேசுகிறான்! பெரியவர்களை ஏசுகிறான்!"

"ஏனோ தெரியவில்லை இவன் புத்தி இப்படிக் கெட்டுவிட்டது! நல்ல பிள்ளையாக இருந்தான். நாலுபேர் போற்ற நல்லபடி வாழ்வான் என்று எதிர்பார்த்தோம். கடைசியில் இப்படி ஆய்விட்டான்!"

"என்ன துணிச்சல்! எவ்வளவு தைரியம்! சமயத்தை எதிர்க்கிறான்! சாஸ்திரத்தை வெறுக்கிறான்! சடங்கு சம்பிரதாயங்களை சுட்டுப் பொசுக்குவேன் என்று ஆர்ப்பாட்டம் புரிகிறான்! குருமார்களையும் தாக்குகிறான்!"

"மடையன்! முன்னோர் சென்ற வழியின் மேன்மையை உணராத கசடன்! ஆயிரங் காலத்துப் பயிரை அழிக்க எண்ணும் ஆணவக்காரன்!"

"ஒரு கடிகாரக்காரன் மகன் என்பதற்கேற்ற அடக்க ஒடுக்கத்துடனா பேசுகிறான்! மணிமுடி தரித்த மண்டலாதிபதி போல அல்லவா பேசுகிறான்! விட்டுவைக்கக் கூடாதப்பா இந்த ஆணவக்காரனை!"

"ஆம்! விட்டுவைக்கத்தான் கூடாது. விரட்ட வேண்டும் பிரான்சைவிட்டு. கெட்டு அலையவேண்டும் அவன். ஒரு ஆண்டு ரொட்டிகூடக் கிடைக்காமல் சாக வேண்டும் அந்தத் துர்த்தன்!"

"புத்தகம் எழுதுகிறானாம் புத்தகம்! துவேஷம், பகை, பொச்சரிப்பு, மததூஷணை, நாஸ்திகம் இவ்வளவு குப்பைகளையும் கூளங்களையும் பெருக்கித் திரட்டி ஒரு கூடையில் குவித்து வைத்துக் கொண்டு இதற்குப் பெயர்தான் புத்தகம் என்கிறான்! நெருப்பு வைத்துக் கொளுத்த வேண்டும் இவன் புத்தகத்தை!"

"எமில்! நோவேல் எலோயி! சமுதாய ஒப்பந்தம்! புத்தகங்

களா இவை! பாம்புப் புற்றுகள்! பாஷாணக் கிண்ணங்கள்! இவற்றைக் கையால் தொடுவதே பாவம்! பிரித்துப் படிப்பது மகத்தான மதத்துரோகம்! நல்ல கிறிஸ்துவன் எவன் சீந்துவான் இச் சுவடிகளை! யார் வாங்கப் போகிறார்கள்! செல்லரித்துச் சாம்பலாக வேண்டியதுதான் இந்தத் தூஷணைக் காவியங்கள்!"

1761-62-ஆம் ஆண்டுகளில், பிரான்ஸ், இது போலப் பேசலாயிற்று. திக்கெட்டுமிருந்து தீப் பொறி பறக்கும் நடையில் கண்டனச் சொற்கள் கிளம்பலாயின. சீமான்கள் சீறினர். மாளிகை வாசிகள் விட்டோமா பார் இந்த வீணனை என்று விண்ணதிர முழக்கமிட்டனர். குருமார்கள் கோபக் கனல் கக்கினர். அதிகார வர்க்கம் உருட்டும் கண்களால் முறைத்துப் பார்க்கலாயிற்று. பாமரர்கள் பதறினர். மத பக்தர்கள் உளம் துடித்தனர். பெரிய மனிதர்கள் என்போர் சீச்சீ! உருப்படுவானா இவ்வுலுத்தன் என்று சபித்தனர். மன்னன் லூயி அடக்கு முறைப் பாணத்தை எடுத்து வீசத் துடிதுடித்தான்.

இவ்வளவு கொதிப்பும் கொந்தளிப்பும் குமுறலும் கோபச் சொற்களும் அலை அலையாக எழுந்து பிரான்ஸ் மக்களின் மனம் எனும் கடலோரத்தை மோதித் தாக்குவதற்குக் காரணமாக இருந்தவை மூன்று புத்தகங்கள்!

மற்ற புத்தகங்களைப் போலத் தான் இவையும் பிரஞ்சுமொழியிலே எழுதப்பட்டிருந்தன. மற்ற புத்தகங்களைப் போலத் தான் இவையும் கருப்புமையால் அச்சிடப் பட்டிருந்தன. மற்ற புத்தகங்களைப் போலத்தான் இவையும் மக்களிடம் விலை கூறி விற்கப்பட்டன. ஆனால், மற்ற புத்தகங்களைக் கண்டபோது ஏதோ படித்தோம் — பார்த்தோம்—மறந்தோம் என்று இருந்த பிரான்ஸ் இந்த மூன்று சுவடிகளைக் கண்டபோது மட்டும் அப்படி ஏனோ தானோ என்று இருக்க முடியவில்லை. சிலர் சீறினர்—சிலர் பதைத்தனர். ஒரு சிலர்—இவர்கள் சிந்திக்கும் பண்பு படைத்தவர்கள், மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தனர். இப்புத்தகங்களைக் கண்டு, இவற்றில் தரப்பட்டிருந்த சிந்தனைகளைக் கண்டு, இச் சிந்தனைகளின் சீர்திருத்த வேகத்தைக் கண்டு, களிப்பினால் கூவியவர்கள் மிகச் சிலர் தான். ஏனையோரெல்லாம் முறைத்துப் பார்த்தவர்கள், முணுமுணுத்து நின்றவர்கள், கடுங்கோபம் காட்டியவர்கள், கனல் தெறிக்கப் பேசியவர்கள் என்னும் இத்தகு சொற்றொடர்களால் அழைக்கப்பட வேண்டிய நிலையினராகத்தான் ஆனார்கள்.

பிரஞ்சு பூமிமுழுவதையுமே ஒரு குலுக்குக் குலுக்கி விட்டன இந்தப் புத்தகங்கள்.

வீதிகளிலே மக்கள் இவற்றைப் பற்றித்தான் பேசலானார்கள். விருந்து மண்டபங்களிலே சீமான்கள் இவற்றைப் பற்றித்தான் பேசலானார்கள். ஆட்சி மன்றங்களிலே அதிகாரிகள் இவற்றைப் பற்றித்தான் பேசலானார்கள்.

மன்னன் அரண்மனையிலேயும் சரி, உழவன் குடிசையிலேயும் சரி—இந்த மூன்று சுவடிகளைப் பற்றியேதான் உரையாடல் நிகழலாயிற்று.

சிற்றுண்டிச்சாலைகளானாலும், அறிஞர்கள் கூடும் அவைகளானாலும், இளைஞர்கள் சீட்டாடும் சாவடிகளானாலும், முதியவர்கள் போகும் நாடகக் கொட்டகைகளானாலும், எங்கும், பேச்சு, இந்தப் புத்தகங்களைச் சுற்றித்தான் வட்டமிடலாயிற்று.

அதிகார வர்க்கத்தின் ஆணவத்தையும், சீமான்களின் சோம்பேறி வாழ்க்கையையும், அரண்மனைகளில் நிகழும் கோலாகலத்தையும் நேரிடையாகத் தாக்காவிட்டாலும் அவற்றின் மீது எதிர்ப்புணர்ச்சி உருவாகும் விதத்திலே மறைமுகமாகத் தாக்கிய இந்த ஏடுகள் மிகவும் அபாயகரமானவை என்று ஆட்சியாளர்களால் கருதப்பட்டன. இவை மக்களிடத்திலே அதிகமாகப் பரவா முன்னர் இவற்றைப் பறிமுதல் செய்தும் படிக்கக் கூடாத புத்தகங்கள் என்று பிரகடனம்செய்தும், இவற்றை இயற்றிய ஆசிரியரை பாஸ்டில் சிறைக்குள் தள்ளியும் இந்தப் புத்தகங்களுக்கு இருக்கும் செல்வாக்கைப் பறித்தெடுத்துக் குழிதோண்டிப் புதைக்க வேண்டியது மிகவும் அவசியம் என்ற முடிவுக்கு வந்தது பிரஞ்சு நாட்டு அதிகார வர்க்கம். அறிவு பரவுகிறது என்றால், எதையும் ஆராய்ந்து பார்க்கும் பண்பு வளர்கிறது என்றால், வைதீகத்தை வீழ்த்தும் போக்கு மக்களிடையே உருவாகிறது என்றால், விடுதலை ஆர்வம் சமுதாயத்திலே அலைமோதத் தொடங்கி விட்டது என்றால் உடனே, ஏவு—ஏவு—அடக்கு முறையை ஏவு என்று கூறுவதுதான் அதிகார வர்க்கத்தின் பரம்பரைப் பழக்கம்—இந்த நாட்டிலும்! எந்த நாட்டிலும்! இன்றும்! என்றும்! இந்த வழக்கத்திற்கு விரோதமில்லாமல்தான் நடந்துகொண்டனர் மன்னன் லூயியின் அதிகாரிகள். யார் அவன் இந்தப் புத்தகங்களைத் தீட்டிய தூர்த்தன்—பிடித்துப் போடு அவனைச் சிறையில் என்று தாக்கீது பிறப்பித்தது அதிகார பீடம்.

ஆனால் அந்தத் தாக்கீதுநிறைவேற்றப்படுமுன்னால், நூலாசிரியர், ஆட்சியாளர்களை

ஏமாற்றி விட்டு, பிரஞ்சு நாட்டு எல்லையைக் கடந்து, அண்டையிலிருக்கும் ஸ்விட்ஜர்லாந்துக்குத் தப்பி ஓடிவிட்டார். அதே சமயத்தில் பாரீஸ் நீதி மன்றம் அவருடைய எமில் என்னும் புத்தகத்தின் மீது கண்டன மாரியைப் பொழிந்தது. அது மட்டுமல்ல. அந்தப்புத்தகத்தை நூற்றுக் கணக்கான மக்கள் எதிரில் நெருப்பில் இடடுப் பொசுக்கிற்று.

ஸ்விட்ஜர்லாந்திலேயும் ஆசிரியர் நிம்மதியாக இருக்க முடியவில்லை. அவர் அந்த நாட்டை அடைந்த நான்காம் நாள் புரட்சிக் கருத்துக்களைத் தூவும் இந்த 'அபாயகரமான' மனிதரை வெளியே விட்டு வைப்பது நாட்டின் அமைதியைக் குலைக்கும் என்று கூறிக்கொண்டு, அந்த நாட்டு ஆட்சியாளர்கள் அவரைச் சிறையிலடைக்கக் கட்டளை பிறப்பித்தனர். அவருடைய புத்தகங்கள் அந்த நாட்டு நீதி மன்றங்களாலும் காரசாரமான முறையில் கண்டித்து ஒதுக்கப்பட்டன.

சுவிஸ் நாட்டு சிறைக்கதவுகள் அவரைக் கூவி அழைக்கத் தொடங்கியதும் ஆசிரியர் அந்த நாட்டையும் துறந்து பிரஷ்ய நாட்டிற்குள் அடைக்கலம் புகுந்தார். அங்கே மோதியேர் என்னும் ஊரில் அவர் தங்கியிருந்தபோது, அவருடைய சீர்திருத்த உணர்ச்சியையும் பகுத்தறிவு மனப்போக்கையும் கேள்விப்பட்டு வெகுண்டெழுந்த பாதிரி ஒருவர் ஊர் மக்கள் பலரைத் தூண்டிவிட்டு அவர் தங்கியிருந்த இல்லத்தின்மீது கற்களைப் பொழிந்தும் கடும் தாக்குதல் நடத்தியும் அவருக்கு அளவற்ற தொல்லை தரலானார். வாழ்க்கை அவருக்கு அங்கே சகிக்க முடியாத அளவு வேதனையும் எதிர்ப்பும் சங்கடமும் நிறைந்ததாகி விட்டது. எனவே அந்த நாட்டையும் துறந்து இறுதியில் இங்கிலாந்தை அடைந்து டேவிட் ஹ்யூம் என்னும் அறிஞர் ஒருவர் இல்லத்தில் தங்கலானார். அங்கும் அவர் நீண்ட நாட்கள் அமைதியாக வாழ முடியவில்லை. போகும் இடங்களிலெல்லாம் அவர் புரட்சி ஆர்வத்தைக் கிளப்பினார். இன்றைய உளுத்துப்போன சமுதாயத்தை மாற்றி அமைத்து மறுகோலம் செய்தாகவேண்டும் என்று முழக்கமிட்டார். எல்லோரும் சம நிலை மக்கள் என்று முரசு கொட்டினார். எனவே எதிர்ப்பும் அவர் சென்ற இடமெல்லாம் அவர் பின்னே நிழல்போல் தொடர்ந்து வந்தது. சில இடங்களில் அதிகார வர்க்கம்' அவர்மீது அடக்குமுறை ஈட்டிகளைப் பாய்ச்சலாயிற்று. சில இடங்களில் பாதிரிமார் கூட்டம் அவர்மீது பாமரர்கள் கோபத்தை மூட்டிவிடலாயிற்று. சில இடங்களில் சீமான்களின்

சிற்றம் அவரைச் சுட்டுப் பொசுக்கத் துணிந்து முன் வந்தது. ஆபத்துக்கள் இது போலக் கடலலையென எழுந்தும் அவர் அஞ்சினாரில்லை. அலைகடல் மீது செல்லும் மரக் கலமெனப் புரட்சிக்கீதம் பாடியபடிதான் இருந்தார். எட்டு ஆண்டுகள் நாடுவிட்டு நாடு, ஊர் விட்டு ஊர், வீடு விட்டு வீடு, மாறிமாறித் தப்பி ஓடி ஓடி வாழ்ந்தார். ஆனால், அவருடைய கொள்கைகள்! அவற்றை மட்டும் அவர் ஒரு போதும் மறந்ததில்லை. தணலிலே வெந்த தங்கம் முன்னிலும் சுடர்வீசித் திகழ்வதைப் போல, எதிர்ப்பு வளர வளர அவருடைய சீர்திருத்த ஆர்வம் மேலும் பல மடங்கு வளரலாயிற்று. அவருடைய பகுத்தறிவு உள்ளம் என்னும் செடி செழிப்புற வளர்வதற்கான எருவாயிற்று, உரமாயிற்று, ஞாயிற்றின் ஒளியாயிற்று — எதிர்ப்பு!

இவ்வண்ணம், எதிர்ப்பிலே வளர்ந்த ஏந்தல் சாதாரண மக்களையும் சிந்திக்கத் தூண்டிய சீர்திருத்தவாதி, திக்கெட்டுஞ் சென்று திடநெஞ்சுடன் பணி புரிந்த போராளிஞர், சொந்த நாட்டில் சுகமாக இருக்க முடியாமல் நாடு நாடாக அலைந்து திரிந்த சிந்தனைச் சிற்பி, வேறு யாருமல்ல, ரூசோ! பிரஞ்சுப் புரட்சியின் காரணகர்த்தா! ஆம்! அவர்தான், சீர்திருத்த எண்ணங்களை சிறு சிறு புத்தக வடிவில் நாட்டில் நடமாட விட்ட குற்றத்திற்காக வாழ்வு சிதைந்து சுகம் இழந்து நாடோடியாக மாறிய நாவலாசிரியர்!

ரூசோ, 1712-ஆம் ஆண்டு, ஸ்விட்ஜர்லாந்தில் உள்ள ஜெனிவா நகரத்தில், கடிகாரத் தொழில் புரிந்த ஒருவரின் இரண்டாவது மகனாய்ப் பிறந்தார். பிறந்த பதினைந்தாம் நாள் தன் அன்னையை இழந்தார். அன்னை இல்லாக் குறையால் அவர் சிறிதும் வாட்டமுறா வண்ணம் அவரைப் போற்றிப் பாதுகாத்து வந்த பெருமை அவருடைய அத்தையையே சாரும்.

சிறுவன் ரூசோவுக்கு வயது பத்தானபோது தந்தை ஏதோ ஓர் வழக்கில் சிக்கிக் கொண்ட காரணத்தால் ரூசோவை தன் சகோதரன் பொறுப்பில் விட்டு விட்டு நாட்டை விட்டே வெளியேறி விட்டார்.

தாய் இல்லை! தந்தை மறைந்து விட்டார்! இந்நிலையில் ரூசோ ஏக்கம் நிறைந்தவனாகவும், இன்னதென்று அறிய இயலாத சோக உணர்ச்சியால் கவரப் பட்டவனாகவும், உற்சாகம் இழந்தவனாகவும் காணப்பட்டதில் வியப்பேதுமில்லை.

இரண்டு ஆண்டுகள், ரூசோ, ஒரு பள்ளிக்கூடத்தில் கல்வி

பயின்றார். பின்னர் தொழில் கற்றுக் கொள்வதற்காக கடிகாரத்தில் ஓவியங்கள் செதுக்கும் ஓர் அலுவலகத்தில் விடப்பட்டார். அமைதியாக வாழும் பண்பும், பிறரிடம் கலகலவென்று பேசத்தெரியாத தன்மையும் படைத்த இளைஞன் ரூசோவுக்கு, கூச்சலும் குழப்பமும் நிறைந்த அந்த அலுவலகம் சிறிதும் பிடிக்க வில்லை. எனவே ஒரு நாள் யாருக்கும் சொல்லாமல் வீட்டிற்கும் தெரிவிக்காமல் ஊரை விட்டே ஓடி விட்டான் இளைஞன் ரூசோ.

பிற்காலத்தில் பிரஞ்சு நாட்டிலேயே ஒப்பும் உயர்வுமற்ற பேரறிஞராகத் திகழ்ந்த ரூசோவுக்கு, இளமைப் பருவத்தில் ஊரை விட்டு ஓடிய அந்த நேரத்தில், ரொட்டி வாங்கவும் கையில் காசில்லை. உள்ளம் உடைந்து போனான் ரூசோ. பிச்சை எடுக்கவும் தயாரானான்.

என்ன செய்வது, எங்குப் போவது, யாரைப் பார்ப்பது, எப்படி வாழ்வது—இந்தக் கேள்விக் குறிகள் ஒவ்வொன்றும் அவன் இதயத்தைச் சுற்றி வட்டமிடலாயின. அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. கால் போன வழியெல்லாம் நடந்தான். எந்தெந்த திசை யெல்லாமோ போகலானான்.

இறுதியில் ஒரு பாதிரியாரிடம் அடைக்கலம் புகுந்தான். அவர், இளைஞன் ரூசோவை உணவும் உடையும் கொடுத்து ஆதரித்து, புதிதாகக் கிறிஸ்தவ மதத்தில் தன்னால் சேர்க்கப்பட்ட **வாரன்ஸ் அம்மையார்** என்னும் சீமாட்டியிடம் அனுப்பி வைத்தார்.

வாரன்ஸ் அம்மையார் இளமையிலேயே கணவனை இழந்து கைம்பெண் ஆனவர்கள். பிறர்க்கு உதவி செய்வதிலேயே மிச்சமுள்ள தன் வாழ்நாள் முழுவதும் செலவாக வேண்டும் என்பது அந்த அம்மையாரின் ஆசை. ஏராளமான சொத்து அந்த அம்மையாரிடம் இருந்தது.

ரூசோவுக்குத் தன்னை ஆதரிக்க ஓர் இடம் தேவையாக இருந்தது. வாரன்ஸ் அம்மையாருக்குத் தன்னால் ஆதரிக்கப்பட ஓர் ஆள் தேவையாக இருந்தது. எனவே, ரூசோ, வாரன்ஸ் அம்மையாரின் உதவியை நாடிச் சென்ற போது, அம்மையார், மிகுந்த மகிழ்ச்சியுடன் உதவி செய்ய முன் வந்தார்கள்.

அம்மையார் ரூசோவுக்குப் பல்வேறு கலைகளிலும் பயிற்சி அளித்தார்கள். பல நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் அழைத்துச் சென்று உலக அறிவை வளர்த்தார்கள். அம்மையாரின் பாதுகாப்பில் ஏறத்தாழ, பன்னிரண்டு ஆண்டுகள் தங்கி யிருந்தார் ரூசோ. இந்தக் காலத்தில்தான் ரூசோ, வர

லாறு, தத்துவம், கவிதை, வானநூல் முதலான பல பொருள்களைப்பற்றிய எண்ணற்ற நூல்களை வாசித்துத்தன் அறிவுச் செல்வத்தை வளர்த்துக் கொண்டார். அவருடைய வாழ்நாளிலேயே இந்த சீமாட்டியின் பாதுகாப்பில் இருந்த இந்தப் பன்னிரண்டு ஆண்டுகளில் அவர் அமைதியாகவும் ஆநந்தமாகவும் வாழ்ந்ததைப் போல வேறு எந்தக் காலத்திலும் வாழ்ந்தது கிடையாது.

எதிர்பாராத ஆபத்துக்கள், திடீர்க்கவலைகள், புதிய புதிய நிகழ்ச்சிகள், திடுக்கிடத் தக்க நிலைமைகள் ஆகிய இவற்றால் நிரப்பப்பட்டிருக்க வேண்டும் தன் வாழ்க்கை என்னும் கருத்துடைய ரூசோ, வேலை வெட்டி இல்லாமல், அமைதியாக இருந்து, வேளா வேளைக்கு உண்டு, சீமான் போன்று சிங்காரமாக வாழும் இந்த உல்லாச நிலையை எத்தனை நாட்களுக்குத்தான் சகித்துக் கொண்டிருப்பார்! ஒரு நாள், கூண்டை விட்டு வெளியேறி விட்டது கிளி! ரூசோ, அம்மையாரை விட்டுப் பிரிந்து விட்டார்! அப்போது அவருக்கு வயது 28.

அம்மையாரின் பாதுகாப்பை இழந்ததும், வறுமை, ரூசோவை வாட்டி வதைக்கலாயிற்று. வாழ்க்கைப் பாலைவனத்தில் பணம்என்னும் நீர் கிடைக்காத காரணத்தால் தத்தளிக்கத்தொங்கினார் ரூசோ. அவருடைய அத்தை அவருடைய குழந்தைப் பருவத்தில் அவருக்குக் கற்பித்திருந்த இசைப் பயிற்சி இப்போது அவருக்கு மிகவும் பயன் பட்டது. இசை பயிற்றுவிக்கும் ஆசிரியராக இருந்து ஆங்காங்கே குழந்தைகளுக்கு இசை கற்பித்துக் கொடுத்து அதன் மூலம் பெற்ற சிறு தொகையைக் கொண்டு தான் அவருடைய வாழ்க்கைச் சக்கரத்தை உருட்டிக் கொண்டிருக்க முடிந்தது இந்தக் காலத்தில்! பத்து ஆண்டுகள் இது போல வறுமையுடன் விளையாடிக் கொண்டிருந்தார் ரூசோ.

வயது 38 அவருக்கு ஆன போது தான், எழுத்தாளர் என்ற முறையில், முதல் வெற்றி அவரை எட்டிப்பார்த்தது. 1750-ல், **திஜோன் கலைக் கழகத்தார்**, "விஞ்ஞானங்கள் கலைகள் இவற்றின் வளர்ச்சி மக்கள் ஒழுக்கத்தை வளர்த்திருக்கின்றனவா அல்லது கெடுத்திருக்கின்றனவா?" என்பதைப் பற்றி நடத்திய பரிசுப் போட்டியில் ரூசோவுக்கே பரிசு கிடைத்தது. இந்த நிகழ்ச்சியிலிருந்து தான் ரூசோவின் வாழ்க்கையில் புதிய சாகாப்தம் உருவாகிறது. இது வரை கவனிப்பாரற்றுச் செல்லரித்துக் கிடந்த அவரது இலக்கிய அறிவு இதன் பின்னர் தான் பலருடைய கவனத்தையும் தன்பால் ஈர்க்கத்தக்க அளவு பேரொளி வீசித்திகழலாயிற்று. இதன் பின்னர் அவரு

டைய பேனா முனையிலிருந்து உருண்டோடி வந்த ஒவ்வொரு சொல்லையும் பிரஞ்சு மக்கள் கூர்ந்து கவனிக்கலாயினர். அவருடைய புதிய சிந்தனைகள் பலருக்குப் பிடிக்கவில்லை. அவருடைய தீவிரவாதம் பலரை மிரண்டோடச் செய்தது. அவர் பழங்காலக் கட்டுப்பாடுகளையும் மூடநம்பிக்கைகளையும் வெட்டிச் சாய்த்த போக்கைப் பலரால் ரசிக்க முடியவில்லை. ஆனால் அவருடைய சொற்கள்! அந்தச் சொற்கள் ஒன்றன் பின் ஒன்றாக மிதந்து வரும் அழகு! அந்த அழகிலே காணப்படும் ஒருவித வசீகர சக்தி! இவற்றின் பிடிப்பிலிருந்து மட்டும் விடுபட எந்தப் பிரஞ்சுக்காரனாலும் முடியவில்லை. ரூசோ எழுத்தாளர் உலகிலே ஒரு நடமாடும் நட்சத்திரமானார். முகிலைக் கிழித்து வெளிக்கிளம்பிய முழுமதியைப் போல அவருடைய பெயர் மக்கள் உள்ளம் என்னும் வானவீதியிலே புகழெனும் தேர் ஏறி வீர உலா வரலாயிற்று. பாராட்டுகள் இப்போதெல்லாம் அவரை வேகமாகத் தேடி வரலாயின. பட்டமும் பதவியும் அவருடைய காலடியிலே வந்து குவியலாயின.

அரசாங்க மாளிகையில் ஓர் உயர்தர உத்தியோகமும் தகுந்த ஊதியமும் அளிப்பதாகக் கூறி ஆட்சியாளர்கள் அவரை வேண்டி அழைத்தார்கள். அவர் தவிர வேறு ஒருவராக இருந்தால், வறுமைக் குளவியால் கொட்டப்பட்டு வேதனைப்பட்டுக் கொண்டிருக்கும் அந்த நேரத்தில் கிடைத்த அந்தப் பதவியைக் கிடைத்தற்கரிய செல்வம் எனக்கொண்டு, ஓடோடிச் சென்று தேடி எடுத்துக் கொண்டிருப்பார்கள். ஆனால் ரூசோ அந்த அலுவல் பார்க்க ஒப்புக்கொண்டாரில்லை. கட்டுக்காவலின்றி வானம்பாடி போல் எங்கும் பறந்து திரிந்து சுதந்தரமாக இருக்கும் உயர் நிலையையே அவர் விரும்பினார். எனவே வலியவந்த மாளிகை வாசத்தை வெறுத்து ஒதுக்கினார்.

1753-ல் ரூசோ, மக்களிடையே "ஏற்றத்தாழ்வுகள் எப்படி ஏற்பட்டன?" என்னும் சிறந்த நூல் ஒன்றை வெளியிட்டார். சொத்துரிமை என்பது இல்லாத பழங்காலத்தில் மனிதன் எத்தகைய ஏற்றத் தாழ்வும் இன்றி வாழ்ந்தான் என்பதையும், தனி மனிதன் சொத்து என்னும் தத்துவமும் நடைமுறையும் ஏற்பட்ட பிறகுதான் ஏற்றத் தாழ்வுகள் சமுதாயத்தில் ஏற்படலாயின என்பதையும் விளக்கிக் கூறும் இந்தச்சுவடி, பிரஞ்சு மக்கள் உள்ளத்தில் ஒரு கருத்துப் புரட்சியை உண்டுபண்ணிற்று; சிறந்த சிந்தனை அலைகளை நாடெங்கும் எழுப்பிற்று.

இவருடைய புகழையும் பெயரையும் கேள்விப்பட்டு இவர் பால் பெருமதிப்புக்

கொண்ட **எமிலே அம்மையார்** என்னும் செல்வச் சீமாட்டி இவருக்காக வென்றே ஒரு தனி இல்லத்தை அமைத்துக் கொடுக்க முன் வந்தார். அந்தப் பேருதவியை மிகுந்த மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்ட ரூசோ அந்த இல்லத்தில் தங்கி வாழ்க்கையில்தான், **சமுதாய ஒப்பந்தம், எமில், நொவேல் எலோயி** என்னும் மூன்று அரிய நூல்களை வெளியிட்டார்.

இந்த மூன்று நூல்களும் வெளியானவுடனே பிரஞ்சு நாடே அதிர்ந்தது. ஒவ்வொரு பிரஞ்சுக்காரன் உள்ளத்திலும் ஒருபூகம்பம் ஏற்பட்டது. பழங் கால சம்பிரதாயங்களும் சடங்கு முறைகளும் முறிந்து விழத் தொடங்கின. மக்கள் மன்றத்தில் ஒருபுறம், குருமார்கள் மீது கோபமும், சீமான்களின்மீது அதிருப்தியும் கிளர்ந்தெழலாயின. ஆனால் அதே நேரத்தில் மற்றோர் புறம், உண்மையை உணராத பாமரர்கள் அறிஞர் ரூசோவை மத விரோதி என்றும் தூற்றலாயினர். இந்த மூன்று நூல்களும் வெளியானவுடனே பிரான்ஸ் எண்ணசிய எண்ணம் —நிகழ்த்திய உரையாடல்— எடுத்துக்கொண்ட நடவடிக்கை— அதனால் ரூசோவுக்கு ஏற்பட்ட நாடோடி வாழ்க்கை இவற்றின் விளக்கம்தான் இந்தக் கட்டுரையின் துவக்கத்தில் நம்மால் தீட்டப்பட்டிருக்கும் காட்சி

மக்கள் கூட்டம் ஒரு சமுதாயமாகவும் ஓர் அரசாங்கமாகவும் உருவாகாமல் தனித்தனி மனிதகளாய், நாடோடிகளாய், நாகரிகம் அறியாதவர்களாய், காட்டு மிராண்டிகளாய் வாழ்ந்து கொண்டிருந்த பழங் காலத்தில் இன்றைய தினம் நம்சமுதாயத்தில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகள், மேல் கீழ் வகுப்புப் பிரிவுகள், மனிதனை மனிதர் ஆளும் அடிமை முறைகள், தனிச் சொத்து உரிமைகள், அவற்றின் விளைவாக ஏற்படும் பல் வேறு கெடுதிகள் ஆகிய அனைத்தும் இல்லாமலிருந்தன என்றும், நாகரிக வளர்ச்சியும் அரசாங்கம் என்னும் அமைப்பும் ஏற்பட்ட பின்னரே இந்த ஏற்றத் தாழ்வுகள் உருவாயின என்றும் ரூசோ திண்ணமாக நம்பினார். ஆனால் அவர் இந்த ஏற்றத் தாழ்வுகளை ஒழிப்பதற்காக நாம் மீண்டும் காட்டு மிராண்டி வாழ்க்கைக்குக் குடியேறிவிடவேண்டும் என்று கூறினாரில்லை. இந்த ஏற்றத் தாழ்வுகள் இல்லாவண்ணம் இன்றைய சமுதாயத்தைத் திருத்தி அமைக்கவேண்டும் என்றுதான் எடுத்துரைக்கலானார்.

ஆட்சியாளர்கள் எதேச்சாதிகாரக் கொடுங்கோலர்களாகவும், மக்கள் அடங்கி ஒடுங்கி

வாழும் ஊமைகளாகவும் இருக்கும் நிலைமாறி, சமத்துவமும் சுதந்தரமும் சகோதரத்துவமும் இன்பப் பவனி வரும் நிலையிலமைந்த புதியதோர் ஆட்சிமுறை உருவாக வேண்டும் என்னும் சீரிய கருத்தின் சிறந்த விளக்கம்தான் அவருடைய **'சமுதாய ஒப்பந்தம்'**.

கல்வித் துறையிலே, உளுத்துப்போன பழைய குருட்டுப் பழக்கவழக்கங்களுக்கும், உலர்ந்த சருகாகிக் கிடக்கும் மதமூட நம்பிக்கைகளுக்கும் நாப்பட்டுள்ள செல்வாக்கு சிதைக்கப்பட்டு, புது உலக எண்ணங்களுக்கும் புரட்சிக் கருத்துக்களுக்குமே அதிக இடம் அளிக்கப்படவேண்டும் என்னும் அரிய எண்ணத்தின் அழகிய கதை வடிவம்தான் **'எமில்'**

குடும்ப வாழ்க்கையையும் திருமண ஏற்பாடுகளையும் எப்படிச் சீர்திருத்தி அமைக்கலாம் என்பது பற்றிய அவருடைய கருத்துக் குவியல்தான் **'நோவேல் எலோயி.'**

இவ்வண்ணம் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலேயும் புரட்சிகரமான மாறுதல் தேவை என்பதை உள்ளத்தைத் தொட்டிழுக்கும் உணர்ச்சி வாய்ந்த நடையில் எடுத்து விளக்கிய காரணத்தால்தான் இந்த மூன்று புத்தகங்களும் பயங்கரமான தீப்பொறிகள் என்று ஆட்சியாளர்களால் கருதப்பட்டு நீதிமன்றத்தால் சுட்டெரிக்கப் பட்டன.

சுதந்திரம்! சமத்துவம்! சகோதரத்துவம்! இந்த மூன்று சொற்களும் தான் மூலாதார முழக்கங்களாயின பாரைக் குலுக்கிய பிரஞ்சுப் புரட்சி மூண்டபோது! கொடுமையின் நிலைக்களமாக இருந்த **பாஸ்டில்** சிறையைத் தவிடுபொடியாக்குவோம் என்று விண்ணதிர மண்ணதிர சீமான்கள் மனம் அதிர பாரிஸ் மக்கள் முழக்கமிட்ட போது அவர்களுடைய இலட்சியச் சொற்களாக, ஒவ்வொரு பாட்டாளித் தோழரின் இருதயத்திலிருந்தும் பீறிட்டெழுந்த ஆவேச ஒலிகளாக, குரு—சீமான்—மன்னன் என்னும் முக்கூட்டு மமதையைத் தூளாக்கிய மூன்று சம்மட்டிகளாக இருந்தவை இந்த மூன்று சொற்கள்தான். இத்தகைய பேராற்றல் வாய்ந்த சொற்களை முதன்முதலாக உருவாக்கிக் கொடுத்தவர் அறிஞர் ரூசோதான். இந்தச் சொற்களெனும் சம்மட்டிகளை உருவாக்கியது மட்டுமா, பிரஞ்சுப் புரட்சியை மூட்டிவிட்ட மாவீரரே ரூசோதான்! அவருடைய சொற்கள் தான், அந்தச் சொற்களிலே துள்ளிப் பாய்ந்த விடுதலை ஆவேசம்தான், அந்த ஆவேசத்தின் இரும்புப் பிடியிலிருந்து தப்ப முடியாமற்போன பிரஞ்சு மக்களின் உணர்ச்சி

வேகத்தின் வழியாகப் புரட்சிப் புயலை நாட்டில் எழுப்பிற்று. எழுப்பி, கொடுங்கோலர்களின் காட்டுத்தர்பாருக்குச் சாவுமணி அடித்தது. ரூசோவின் புத்தகங்கள் வெளியானபோது மக்கள் அவற்றின் முழுப் பொருளையும் உணர முடியாத காரணத்தால் அவற்றிற்குச் சரியான மதிப்பளிக்கவில்லை. பலர் அவற்றின் மீது கண்டனமாரி பொழியவும் செய்தனர். பலர் அவற்றைத் திரும்பிப் பார்க்கவும் மறுத்தனர். ஆனால் அந்த நாட்களிலே தீட்டப்பட்டிருந்த தீவிரக் கருத்துக்கள் சில ஆண்டுகளுக்குள்ளாக எப்படியோ அரசர்களுடைய பளமாளிகைக்குள் புகுந்து அங்கே தனியாட்சி செலுத்தத் தொடங்கிவிட்டன. சீறி எழுந்து சீமான்களின் கொட்டத்தை அடக்க வேண்டும் என்ற துணிவையும் தைரியத்தையும் அவர்களுக்கு அளித்து விட்டன.

ரூசோ 1778-ம் ஆண்டு மறைந்தார். பயங்கர பாஸ்டில் தகர்ந்து வீழ்ந்த நிகழ்ச்சி, அதாவது பிரஞ்சுப் புரட்சி—1789-ம் ஆண்டு பிறந்தது. இடையே இருந்தன பதினொரு ஆண்டுகள்தான். ஆனால் அந்தப் பதினொரே ஆண்டுகளில்தான் ரூசோ பிரஞ்சு நாட்டிலிருந்த ஒவ்வொரு புரட்சி வீரன் உள்ளத்திலேயும் தன்னுடைய அழியாத முத்திரையைப் பொறித்துவிட்டார். இன்றோ, அவருடைய பெயர் உலகைத் திருத்திய உத்தமர்கள் என்ற பட்டியலிலே முதலிடம் பெற்றுத் திகழ்கிறது.

அவர் இறப்பதற்கு இரண்டாண்டுகட்குமுன் தீட்டப்பட்ட அமெரிக்க சுதந்தரப் பிரகடனத்திலும், அவர் மறைந்த 13 ஆண்டுகளுக்கு அப்பால் இயற்றப்பட்ட பிரஞ்சு நாட்டு அரசியல் திட்டத்திலும் மட்டுமல்ல, அவர் மரணத்தைத் தழுவி 172 ஆண்டுகள் கடந்த பின்னர் உருவாக்கப்பட்டுள்ள இன்றைய இந்திய அரசியல் திட்டத்தின் பாயிரத்திலுங்கூட ரூசோவின் பேனா முனையிலிருந்து பிறந்த சுதந்தரம் சமத்துவம் சகோதரத்துவம் என்னும் இலட்சியச் சொற்கள் இடம் பெற்றிருக்கின்றன. ரூசோ மறைந்து விட்டார் என்று சொன்னோமா? இல்லை. ரூசோ மறைந்துவிடவில்லை! இன்னமும் நடமாடிக் கொண்டுதானிருக்கிறார். என்றும் நடமாடியபடிதான் இருப்பார். விடுதலை ஆர்வமும் பகுத்தறிவுத் தாகமும் எந்த நாள்வரை உலகிடை இருக்குமோ அந்த நாள் வரை ரூசோவுக்கு மரணம் என்பது கிடையாது. மரணத்தைத் தாண்டிய முழுமனிதர் அவர்!

"ஆரம்பக் கல்வி" இனும்

ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரையில், எமது "**புது முறை சங்க வாசகங்களை**" பாட புத்தகங்களாக வைத்து ஆதரிக்கும் எய்டெட் ஆரம்பப் பாடசாலைகளுக்கு, "**ஆரம்பக்கல்வி**" மாதப் பத்திரிகையை இனுமாக மாதாமாதம் அனுப்பிவைக்கப்படும். மாதிரிப் பிரதிகள் வேண்டுபவர்கள் கீழ்க் குறித்துள்ள அளவுக்கு தபால் ஸ்டாம்புகளை (Postage Stamps) வாங்கி கவரில் வைத்து அனுப்பவும். புத்தகங்கள் இனுமாக (Book Post)ல் அனுப்பப்படும்.

ஸ்டாம்புகள் அனுப்ப வேண்டிய தொகை

புதுமுறை சங்க வாசகங்கள்

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
முதல் வகுப்பு	0 4 0	30	23–5–'50
இரண்டாம் வகுப்பு	0 5 0	25	23-5-'50
மூன்றும் வகுப்பு	0 7 0	26	23-5-'50
நான்காம் வகுப்பு	0 8 0	28	23-5-'50
ஐந்தாம் வகுப்பு	0 9 0	28	23-5-'50

இந்த ஐந்து புத்தகங்களை மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் 0-3-3 தபால் பில்லைகள் அனுப்பவும்.

கதைப் புத்தகங்கள்

பாலர் நல்ல கதைகள் நான்காம் வகுப்பு	0 5 0	33	23-5-'50
பாலர் கதா போதினி ஐந்தாம் வகுப்பு	0 5 0	33	23-5-'50

இந்த இரண்டு புத்தகங்களை மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் 0–1–9 தபால் பில்லைகள் வாங்கி அனுப்பவும்.

இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

மூன்றும் வகுப்பு	0 5 0		
நான்காம்	0 7 0	21	23-5-'50
ஐந்தாம்	0 8 0	21	22-5'50

இந்த மூன்று புத்தகங்கள் வேண்டுவோர் 0–1–9 ஸ்டாம்புகள் அனுப்பவும்.

புதிய தேச ஆட்சி முறை

	புத்தகத்தின் விலை			கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
மூன்றாம் வகுப்பு	0	5	0		
நான்காம் வகுப்பு	0	7	0	11	23-5-'50
ஐந்தாம் வகுப்பு	0	8	0	13	23-5-'50

இந்த மூன்று புத்தகங்களை மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் 0–1–9 ஸ்டாம்புகள் அனுப்பவும்.

Mother India English Reader First Primer 0 4 0

மேற்குறித்த 1 முதல் 5-வது வகுப்பு வரையில் எம்மிடத்திலுள்ள எல்லாப் பாடப் புத்தகங்களையும் மாதிரிப் பிரதிகளாக வேண்டுபவர்கள் 0–8–0 தபால் பில்லைகள் அனுப்பி வைக்கவும்.

உயர்தர ஆரம்பப் பாடசாலைகளுக்கு

(Higher Elementary Schools)

அனுமான முறை இலக்கணமும் உரை நடை ஆக்கமும்

ஆறாம் வகுப்பு	0	12	0	29	23-5-'50
ஏழாம் வகுப்பு	0	12	0	29	23-5-'50
எட்டாம் வகுப்பு	0	12	0	29	23-5-'50
தென்னிந்திய பெருமக்கள் 6, 7, 8 வகுப்புக்களுக்கு	0	10	0		

இந்த நான்கு புத்தகங்களை மட்டும் மாதிரிப் பிரதிகளாக வேண்டுபவர்கள் 0–2–9 தபால் பில்லைகள் அனுப்பவும்.

ஆட்சி முறையும் உடல்நல முறையும்

Civics and Hygiene

ஆறாம் வகுப்பு	0	9	0	16	23-5-'50
ஏழாம் வகுப்பு	0	12	0		

0–1–9 தபால் பில்லைகள் அனுப்பவும்

புத்தகம் வைத்துள்ள தோழர்களுக்கு

சென்ற வருடம் நமது பாட புத்தகஙகளை வைத்து ஆதரித்து இனமாக நமது "ஆரம்பக் கல்வியை" பெற்றுக் கொண்டு வரும் பாடசாலைத் தலைமை ஆசிரியர்களும், நிர்வாகிகளும், மே 31-ம் தேதிக்குள், தாங்கள் இவ்வருடமும் 1950—1951 தொடர்ந்து வாசகஙகளை வைத்துக் கொள்வதாக ஒரு கார்டு நமது காரியாலயத்திற்கு முன்னதாகவே எழுதிவிடும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். அதன்பிறகுதான் ஆரம்பக் கல்விதொடர்ச்சியாக வரும்.

தமிழ் நாடு முனிசிபல் ஆரம்ப ஆசிரியர் மாநாடு, திருநெல்வேலி

2 9 MAY 195

(முதல் நாளைய நடவடிக்கைகள் (26-5-50)

காலை 9-மணிக்கு தமிழ் நாடு முனிசிபல் ஆரம்ப ஆசிரியர் மகாநாட்டின் விஷயாலோசனைக் கமிட்டி கூட்டமானது மாயூரம் ஸ்ரீ. சி. கோவிந்தசாமிப் பிள்ளையின் தலைமையில் நடைபெற்றது. மகாநாட்டிற்கு வந்திருந்த தீர்மானங்கள் பரிசீலனை செய்யப்பட்டன.

பிற்பகல் 3–மணிக்கு மகாநாடு ஆரம்பமாயிற்று. திறப்பாளர் தளவாய் ஸ்ரீ. குமாரசாமி முதலியார் M. L. C. மகாநாட்டைத் திறந்து வைத்துப் பேசியதாவது, நம் சுதந்திர நாட்டில் சிறு குழந்தைகளுக்கு அறிவைப் புகட்டும் மகத்தான கடமை ஆரம்ப ஆசிரியர்களுடையது என்றும், எனவே அவர்கள் தங்கள் கடமையை ஆர்வத்துடனும் திறமையுடனும் நிறைவேற்ற வேண்டுமென்றும் ஆசிரியர்கள் ஒழுக்க சீலர்களாகவும் இருக்கவேண்டுமென்றும், கேட்டுக்கொண்டார். ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கவேண்டுமென்றும் மாணவர்களின் கல்வியைப் பற்றி ஆசிரியர்கள் அவ்வப்போது பெற்றோர்களிடம் தெரிவிக்கவேண்டுமென்றும் கூறினார். முனிசிபல் ஆசிரியர்கள் நகரபரிபாலன விஷயமான அரசியலில் கட்சிப் பிரதி கட்சிகளில் பங்கெடுத்துக் கொள்ளக் கூடாது என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

மகாநாட்டுக்குத் தலைமை வகித்த மதுரை நகர் மன்றத் தலைவர் திரு. டி. கே. ராமா அவர்கள் பேசியதாவது, மேற்கத்திய நாடுகள் நாகரிகமற்ற நிலையில் இருந்தகாலத்திலேயே இந்தியா நாகரீகத்தில் முன்னேறியும், கல்வி வியாபாரம் ஆகிய துறைகளில் எல்லா நாடுகளையும்விட முன்நின்றது. ஆனால் இது பழம் பெருமை, இந்தப் பெருமை நமக்கு உற்சாகமளிக்கும் என்றாலும் இப்போது நம்முன்னுள்ள பிரச்சினைகளைக் கவனிக்கத் தவறிவிடக்கூடாது. சுதந்திரம் வந்த பின்பு நமது பொறுப்பு மேலும் பன்மடங்காகிறது. சுதந்திரத்துக்குப்பின் அநேக கஷ்டங்களை நிர்வகிக்க வேண்டிய பொறுப்பு சர்க்காருக்கு ஏற்பட்டுவிட்டது, என்றபோதிலும் காங்கிரஸ் சர்க்கார் தேர்தல் பிரகடனப் பிரகாரம் படிப்படியாகக் காரியங்களைச் செய்துவருகின்றனர். ஒரு

புதிய சமுதாயத்தைச் சிருஷ்டிக்க மந்திரிகள் முயன்று வருகின்றனர்.

கல்வித்துறையில் பெரிய மாறுதல்களை மாகாண சர்க்கார் செய்துவருகிறது. ஆதாரக் கல்வியை அளிக்க பெரும் பொருட் செலவில் முயற்சிகள் நடந்து வருகின்றன. தாய் பாஷை மூலமே கல்வி போதிக்கப்பட வேண்டுமென்ற அபிப்பிராயம் நிலைபெற்றுவிட்டது. ஹிந்தியும் பள்ளிக்கூடங்களில் போதிக்கப்படும். தற்போது நாட்டில் உள்ள குழந்தைகளில் 50 சதவிகிதத்தினரே ஆரம்பக் கல்வி பெறுகின்றனர். இந்தத் தொகை அதிகரிக்க வேண்டும்.

ஊதியம் உயர்வு வேண்டும்

பிரிட்டிஷ் சர்க்கார் ஆட்சி செய்த காலத்தில் கலால்வரியிலிருந்து கல்விக்கு செலவிடப்படுகின்றதெனக் காங்கிரஸ்காரர்கள் குறை கூறினர். இப்போது கலால்வரி அடியோடு ஒழிக்கப்பட்டுவிட்ட நிலைமையில் சர்க்கார் நிதிக்காக மிகுந்த கஷ்டப்படுகின்றனர். தற்போது உங்களுக்களிக்கப்படும் சம்பளம் வாய்க்கும் கைக்கும் போதாதுதான். நகரங்களில் விலைவாசிகளும் மற்ற சாதனங்களும் கிராக்கியாக இருப்பதும் உங்கள் கஷ்டத்துக்கு ஒரு காரணம். கொஞ்சகாலத்துக்கு முன்பு உங்கள் ஊதியம் சற்று கூட்டப்பட்டது. காலப்போக்கில் உங்கள் ஊதியம் அதிகப்படுத்தப்பட வேண்டும்.

எல்லா நகரசபைகளின் செல்வ நிலையும் ஒரேமாதிரியாக இருக்காது. சில நகரசபைகளின் நிதி நிலை அதிகச் சம்பளம் கொடுக்க இடமளிக்கலாம். சென்னை கார்ப்பொரேஷனுக்கு அடுத்தபடியாக மதுரை நகர சபைதான் அதிகப் பணம் கல்விக்காகச் செலவிடுகிறது. வருஷத்தில் ரூ. 4,50,000 கல்விக்காகச் செலவிடுகிறோம்.

நகரசபைகளுக்கு சர்க்கார் உதவி

நகரசபைகளுக்கு மேலும் வரி விதிக்கக் கூடிய துறைகள் ஒன்றுமில்லை. ஆரம்பக் கல்வியை அளிக்கும் பெரும் பொறுப்பு நகர சபைகளின் மீது சுமத்தப்பட்டிருக்கிறது. எனவே சர்க்காரின் நிதி உதவி அவசியமாகிறது. இதைக் குறித்து சர்க்கார் ஆலோசித்து வருகின்றனர்.

கூட்டுறவுச் சங்கங்கள்

மதுரை நகரசபை தங்கள் சிப்பந்திகளுக்குக் குடியிருப்புக்காக வீடுகள் கட்டிவருகிறது. இன்னும் 5, 6 வருஷங்களுக்குள் எல்லாச் சிப்பந்திகளுக்கும் மதுரை நகரசபை வீடுகள் அளித்து விடும். வீடுகளைத் தாங்களே கட்டிக்கொடுக்க நிதி இடம் தராத நகரசபைகள்

தானே வட்டியின்றி முதலீடு செய்து மனைகளைச் செப்பனிட்டு ஆசிரியர்கள் வீடுகள் கட்டிக்கொள்ள உதவலாம். முனிஸிபல் சிப்பந்திகளுக்காக ஒரு கூட்டுறவு சொஸைட்டியை ஏற்படுத்தலாம். நகர சபை சிப்பந்திகள் தங்கள் தேவைகளைப் பெற கூட்டுறவு ஸ்டோர்களை ஏற்படுத்த நகர சபைகள் வட்டியின்றி கடன் கொடுத்து உதவலாம்.

இவ்வாறு செய்வதன் மூலம் சர்க்கார் தங்கள் ஊழியர்களுக்கு உற்சாக மளித்துத் திறமையுடன் வேலை செய்ய உதவலாம்.

மதுரை முனிஸிபாலிடி கல்விக்காக நாலரை சதவிகிதம் வசூலிக்கின்றது. ஆனால் அரசாங்கம் அதில் மூன்றில் ஒரு பங்குதான் கல்விக்காகக் கொடுக்கிறது. இது மிகவும் வருந்தத்தக்க நிலையாகும். பணமில்லாமையால் முனிசிபாலிடிகள் ஆரம்பப்பாடசாலைகளை அதிகப்படுத்தவோ, ஆதாரக் கல்வியை ஆதரித்துப் பாடசாலைகளை ஆதாரக்கல்விச்சாலைகளாக மாற்றி அமைக்கவோ முடியவில்லை. ஆதாரக்கல்வி முறையில் பாடசாலை நடத்த பாடசாலையில் இடம், அதிகம் வேண்டும். தோட்டம் வைக்கக்கூட மனைகள் வேண்டும், தட்டு முட்டு சாமான்கள் ஏராளம் வேண்டும், இதற்கெல்லாம் முனிசிபாலிடிகளில் பணம் இல்லை. அரசாங்கத்தார் வேண்டிய அளவு பணம் கொடுக்க முன்வராவிட்டால் முனிசிபாலிடிகள், அதிகமாக கல்வி வளர்ச்சிக்காகப் பல பாடசாலைகளை ஏற்படுத்த முடியாமலிருக்கிறது.

ஸ்தலஸ்தாபனங்களின் வரும்படியை அதிகரிக்கச் செய்ய இந்திய சர்க்காரால் நியமிக்கப்பட்ட கமிட்டி சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டுத் தங்களது ரிபோர்ட்டை அரசாங்கத்திற்கு சமர்ப்பித்திருக்கிறது. இந்த ரிபோர்ட்டைப் பரிசிலனை செய்து அரசாங்கத்தார் நல்ல தோர் முடிவைச் செய்வார்களென்று எதிர்பார்க்கிறேன்.

தமிழ் நாடு மத்திய சங்கத் தலைவர் மாயூரம் ஸ்ரீ சி. கோவிந்தசாமி பிள்ளை, நிகழ்ச்சி நிரலில் ஏற்பட்டுள்ள மாறுதல்களைப் பற்றிக் குறிப்பிட்டு, மாயூரம் மாகாநாட்டின் தீர்மானங்கள் நிறை வேற்றுவதனால் மட்டும் பலன் கிட்டப் போவதில்லையென்றும், இது வரையில் பல மகாநாடுகள் கூட்டி, நூற்றுக்கணக்கான தீர்மானங்களை நிறைவேற்றி சர்க்காருக்கு அனுப்பியும் தகுந்த பரிகாரம் கிடைக்கவில்லையென்றும், ஏழை ஆசிரியர்களின் வேண்டுகோள்களனைத்தும், ஏழை சொல் அம்பலம் ஏறாத கதையாகவேயிருக்கிறது என்றும் நகர சபைகளுக்

குப் போதுமான அதிகாரங் கொடுக்கப்பட்டால், ஏழை ஆரம்ப ஆசிரியர்களுக்கு ஏதாவது விமோசனம் கிடைக்கலாமென்றும், நகரசபையார் எங்களுக்கு ஆதரவாகத் தீர்மானங்கள் நிறைவேற்றினாலும் அவற்றை அமுலுக்குக் கொண்டுவருவதற்கும் சர்க்கார் அங்கீகாரம் தேவையாயிருக்கிறது என்றும், மாயூரம் நகரசபையார் தாங்கள் ஆதிக்கத்திலுள்ள உயர் கலாசாலைகளில் படிக்கும் தங்கள் முனிசிபல் ஆரம்ப ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு இலவச கல்வியளிப்பதாகத் தீர்மானம் நிறைவேற்றியும் சர்க்கார் நாளதுவரையில் இதை அங்கீகாரம் செய்யவில்லையென்றும், தங்கள் நகர சபையின் பொதுப் பணத்தை, பொது நலத்துக்காகச் செலவு செய்ய நகரசபையார் தீர்மானம் நிறைவேற்றினாலும் அதற்கும் பலவிதமான கஷ்டங்களிருப்பதாகவும் பல உதாரணங்களுடன் எடுத்துக்கூறி, நகர சபைத்தலைவர்கள் சங்கத்துக்கு ஸ்ரீ டி. கே. இராமா அவர்கள் அக்கிராசனராயிருப்பதால், அவர்கள் தீவிர நடவடிக்கைகள் ஏடுத்து, நகர சபையின் அதிகாரத்தை விரைவில் பெற்றால், ஏழை ஆரம்ப ஆசிரியர்களுக்கு அனுகூலம் உண்டு என்றும் எடுத்துப் பேசினர்.

இரவு ஸ்ரீ சி. கோவிந்தசாமி பிள்ளை தலைமையில் மீண்டும் விஷயாலோசனைக் கமிட்டி கூட்டம் கூடி, அநேக விஷயங்களைப் பரிசிலனை செய்து முடிவு செய்தது

சென்னை பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் ஸ்ரீ R. K. சேதுப்பிள்ளை அவர்கள் தலைமையில் மீண்டும் மகாநாடு கூடியது.

பாளையங்கோட்டை நகர சபைத்தலைவர் ஸ்ரீ P. S. சுப்பிரமணிய பிள்ளை அவர்களும், விருது நகர் பால குருகுலத் தலைவர் ஸ்ரீ கி. பெ. சிவ. பிரகாசம் அவர்களும் பேசினர்கள்

தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

புதிய வருடத்துக்கு நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்.

மாயூரம் ஸ்ரீ சி. கோவிந்தசாமி பிள்ளை தலைவர், விருது நகர் ஸ்ரீ வின்செண்டு ராஜ்-உப தலைவர், ஈரோடு ஸ்ரீ கே. நல்லதம்பி-காரியதரிசி.

தவிரவும் ஜில்லாவுக்கு ஒரு கமிட்டி மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

அடுத்த மகா நாடு தஞ்சை ஜில்லாவில் நடை பெறுமென்று அறிவிக்கப்பட்டு, தலைவர் முடிவுரையுடன், வந்த

(46-ம் பக்கம் பார்க்க)

எட்டாவது வகுப்பும், ஆங்கில பாட புத்தகமும்

(என். வெங்கடாஜலம்.)

1951-ம்வருடம் எட்டாவது வகுப்பு அரசாங்கப்பரீட்சைக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கும் ஆங்கிலப்பாடப் புத்தகத்தை நினைத்தால், அரசாங்கத்தார் நாங்கள் இதுவரை விடுத்த பலமனுக்களை அறவே மறந்து காரியங்கள் செய்வதாக அறிகிறோம். நீண்ட நாட்களாக ஹையர்எலிமெண்டரி ஸ்கூல்கள் பரிதாபகரமான நிலையில் தவிக்கின்றன. அரசாங்கத்தார் தைரியமாக ஒன்று அவைகளை மூடிவிட உத்திரவிடவேண்டும்; இல்லையேல் உடனடியாக சீரியமுறையில் திருத்தி அமைக்க வேண்டும். முதன்முதலாக 1942-ம் வருடம் எட்டாவது வகுப்பு அரசாங்கப்பரீட்சை ஏற்படுத்தினார்கள். அப்பொழுது எட்டாவது வகுப்புவரை ஆங்கிலம் கிடையாது என்று கூறினார்கள். பின்னர் 1945-ல் ஆங்கிலம் இஷ்டபாடமாக கற்றுக்கொடுக்கலாம் என்று கூறி நான்காம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்புவரை ஆங்கில பாடத்திட்டத்தையும் வெளியிட்டனர். 1946-ல் நான்கு, ஐந்து வகுப்புகளில் ஆங்கிலம் கற்பிக்கக் கூடாது என்று உத்தரவிட்டனர். 1948-ல் ஆறாவது வகுப்பிலும் ஆங்கிலம் கற்பிக்கக்கூடாது, ஏழாம் வகுப்பில்தான் ஆங்கிலம் ஆரம்பிக்கலாம் என்று உத்திரவிட்டு, 1949-ல் மறுபடியும் ஆறாவது வகுப்பிலேயே ஆங்கிலம் தொடங்கலாம் என்று மாற்றி உத்திரவிட்டனர். அவ்வுத்திரவுப்படி சென்றவருடம் 1949'—50'-ல் ஆறு ஏழு வகுப்புகளில் ஒன்றுபோல ஆங்கிலம் தொடங்கப்பெற்றது. இப்பொழுது எட்டாவது வகுப்பு படிக்கும் மாணவர்கள் சென்ற ஒரு ஆண்டு மட்டுமே ஆங்கிலம் கற்றவர்கள். அவர்களுக்கு சென்ற வருடம்வைத்திருந்தநெல்ஸன் மூன்றாவது பாட புத்தகத்தையே இவ்வருடமும் பாடப் புத்தமாக திட்டம் செய்துள்ளார்கள். சென்ற வருடம் எட்டாவது வகுப்பு படித்த மாணவர்கள் தொடர்ச்சியாக நான்கு வருடங்கள் ஆங்கிலம் கற்றவர்கள். ஆனால் இப்பொழுதுள்ள எட்டாம் வகுப்பு மாணவர்கள், ஒரு வருடம் ஆங்கிலம் அறிவோடு எவ்வாறு இப்புத்தகத்தை கற்க இயலும்? புத்தகமோ நம் நாட்டு சூழ் நிலைக்கேற்றதல்ல. சிறுகதைகள் மருந்துக்கும் கிடையாது.

உயர்தரப் பள்ளியில், ஆரம்பப் பள்ளி மாணவர்களின் அல்லல்.

J. முத்து கிருஷ்ணன்.

காரியதரிசி, சென்னை எய்டெட் பாடசாலை மானேஜர்கள் சங்கம்.

ஆரம்பப்பள்ளிகளில் ஐந்தாவது வகுப்புவரை படித்து, பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களால் அரசாங்கத்தின சட்டப்படி, ரிகார்ட் ஷீட்டுகள் கொடுக்கப் பட்டும், உயர்தரப்பள்ளிகளில் பிள்ளைகளை ஆருவது வகுப்பில் (1 st Form) நேராகச் சேர்க்கப்படுவதில்லை.

இந்தவித்தியாசம் ஏன் என்பதுதான் எமது கேள்வி. ஆரம்பப் பள்ளிகளும், ஒரே அரசாங்கத்தின் சட்டதிட்டங்களுக்குட்பட்டு, அவர்களால் ஏற்படுத்தியுள்ள பாடதிட்டங்களின் படி பயிற்சி பெற்று தேறிய பிள்ளைகளுக்கு தேர்ச்சியுற்றதாக ரிகார்ட் ஷீட் கொடுக்கப்பட்டப் பிறகு உயர்தரப்பள்ளிகளில் அவர்களை ஆருவது வகுப்பில் நேராக சேர்க்கப்படாதக் காரணத்தினுல் அநேக ஆரம்பப் பள்ளிகளில் ஐந்தாவது வகுப்பில் பிள்ளைகள் குறைவதோடு, அப்பள்ளிகளின் மீது பொது மக்களுக்கு ஆரம்பப்பள்ளிகளில் ஐந்தாவது வகுப்பு படித்து முற்றுப் பெற்று பின் உயதரபள்ளிகளில் ஆருவது வகுப்பில் அப்பிள்ளைகளை சேர்க்கக் கூடுமா என்ற ஐயமும், ஆரம்பப் பாடசாலைகள் மீது தாழ்வான எண்ணங்களும் பெற்றோர்களுக்கு ஏற்படுவதனுல் ஆரம்பப் பள்ளிகளில் ஐந்தாவது வகுப்பில் பிள்ளைகள் குறைவதுடன், அப்பள்ளிகளை நடத்திவரும் மானேஜர்களுக்கும், தலைமை ஆசிரியர்களுக்கும் ஓர் தாழ்வான அகௌரவமும் ஏற்படுகிறது. ஆதலின் கல்வி மந்திரியார் அவர்களும், டைரக்டர் அவர்களும் இதைக் கூர்ந்து நோக்கி ஆரம்பப்பள்ளிகளில் ஐந்தாவது வகுப்பு வரை முற்றுப் பெற்று, ரிகாட் ஷீட் வாங்கப் பெற்ற பிள்ளைகளை உயர்தரப் பள்ளிகளில் யாதொரு ஆட்சேபனையும் இன்றி நேராடியாக ஆருவது வகுப்பில் (1 st Form) சேர்த்துக் கொள்ளுமாறு உயர்தரப்பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு உத்திர விடும்படி உடனடியாக கேட்டுக்கொள்ளுகிறேன். இவ்வித ஏற்பாட்டைச் செய்தாலன்றி பொது ஜனங்களுக்கு ஆரம்பப்பள்ளிகளின் மீது ஒருவித நல்ல எண்ணமும் உண்டாகாது என்பது திண்ணம். அவைகளை நடத்திவரும் மானேஜர்களுக்கும், தலைமை ஆசிரியர்களுக்கும் பாடசாலை உற்சாகமாக நடத்த ஊக்கம் குறையுமென்பது திண்ணம்.

Edited, Printed and Published by P. Veeraraghavan in Venkatesan Press, 94/95 New St. Mannady G. T. Madras.